Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

# குடி அரசு

ESTD 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 27-12-1947 சனிக்கிழமை மலர் 16.

## கனவல்ல!

(தோழர் வாணிதாசன்)

★

வாளினை எடுப்பீர்—போர்
வாளினை எடுப்பீர்!

காளைகளே அஞ்சேல் காண்போம் திராவிடத்தை (வா)

தோளுண்டு தமிழுண்டு
பெரியாரின் துணையுண்டு
ஆளும் வகையுண்டு
அறிஞருண்டே நமக்கு (வா)

பண்டு திராவிடர் வடவரின் கீழே
பணிந்து கிடந்த துண்டோ பகருவீர் நீரே!
சண்டைப் புலியொத்தீர்! ஏனோ இன்னும் தயக்கம்?
சமைப்போம் திராவிடத்தை! இமைப்போல் அதனைக் காப்போம்!(வா

கடல் பிறங்கோட்டினான் திராவிடன் அன்றோ!
கஞ்சிக்கு வழியற்றான் திராவிடன் இன்றோ!
வட்மலை திரித்தனன் திராவிடன் அன்றோ!
வாய்பொத்தி வாழ்கின்றான் திராவிடன் இன்றோ!
உடைமை பொதுசெய்து திராவிட நாட்டை
உருவாக்கத் தூளாகும் பணக்காரர் மூட்டை!
கடமை மறவாதீர் திராவிட நாட்டீர்!
கனவல்ல அடைவோம் நாம் இனம் ஒன்றாய்ச் சேரீர்! (வா)

பெண்கள் பகுதி:

# வாழ்க்கை.

(தோழியர் கே.எஸ். கலாநிதி)

வாழ்வு வாழ்வதற்கே வகுக்கப்பட்டதென்பது இன்றைய நியதி மட்டிலுமல்ல. அந்தக் காலத்திலிருந்தே அயன் வகுத்த செயலென்று எண்ணிக் கொண்டேதான், இன்றளவும் மக்கள் வாழ்க்கையைத் துவங்க முற்படுகின்றனர். ஆணுக்கொரு பெண்ணை எப்படியோ துணை சேர்த்து விட்டு விடுகின்றார்கள். ஆனால் வாழ்க்கைத் தோட்டத்திலே உலாவச் செல்ல முற்படும் ஒவ்வொருவரும், தாம் செல்லும் வழி செப்பனிடப்பட்டதா? சீர்திருத்தப்பட்டதா? என்பதைச் சிந்திக்க மறந்து விடுகின்றார்கள்.

வாழ்வுத் தோட்டத்தை அடையும் பாதை பஞ்சு மெத்தை போன்று மிருதுவானதல்ல. பள்ளம் மேடு நிரம்பியது. பயங்கரக் காடுகள் நிறைந்தது. இடையிடையே பயன் தரும் கனிமரங்களும் உண்டு. பகுத்தறிவென்னும் கோல் கொண்டு, சிந்தனை என்ற தடத்திலேசென்றால்தான், அந்தமலர்ச் சோலையை அடைந்து அங்குள்ள மலர்களின் மணத்தை அனுபவிக்க முடியும்.

வாழ்க்கையைத் துவக்க முற்படும் ஆணுக்கு எதற்காகப் பெண்ணைத் துணை சேர்க்க வேண்டும். ஆணும் ஆணும் சேர்ந்தோ அல்லது பெண்ணும் பெண்ணும் சேர்ந்தோ வாழ்க்கை நடத்த முடியாதா? என்றால் அவை இயற்கைக்கு மாறுபட்ட செயலென்றே எவரும் எள்ளி நகையாடுவர். துணைதான் எதற்கு? ஒவ்வொருவரும் தனித்தனியே தத்தம் வாழ்வை நடத்த முடியாதா? என்றால் அதைக் காவியணிந்தவன் வாயளவில் ஒப்புவானே தவிர, கண்ணிய முள்ள மற்றெவரும் ஒப்ப மாட்டார்.

நாம் காணும் ஒவ்வொரு பொருளும், வேறுபட்ட இரண்டு ஒன்றாகச் சேரும் பொழுதுதான் இயக்கமும் பயனும் அழகும் விளைகின்றன. உதாரணமாக இரண்டு மின்சாரக் கம்பிகள் ஒன்று சேர்ந்தால்தான் விளக்கு எரிகிறதும், விசிறி சுழலுவதும், வண்டி ஓடுவதும், படம் ஆடுவதும் பேசுவதும் நடக்கின்றன.

கதிரும் கடலும் சேர்ந்தால்தான், கருமேகங்கள் உண்டாகிக் கனத்த மழை பொழிகின்றது.

பூவும் நாறும் சேர்ந்தால்தான் பூமாலை ஆகிறது.

அதுபோலவே ஆணும் பெண்ணும் சேர்ந்தால்தான் வாழ்க்கையைச்செம்மையுற நடத்திச்செல்ல முடியும். வாழ்க்கை வாழ்வதற்கென்றே நடத்த முடியும். வாழ்க்கையை வளமுள்ளதாக்க முடியும். வாழ்வின் ஒவ்வொரு கூறுபாட்டிலும் மறுமலர்ச்சியை உண்டாக்க முடியும்.

ஆண் பெண் கூடிய வாழ்க்கையில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும், சுகதுக்கங்களையும் சமமாக ஏற்றுக் கொண்டு, உற்ற தோழமையாய்உண்மைத்தொண்டர்களாய்ப் பெண்கள் விளங்குகிறார்கள். இத்தகைய பெண்கள்தான், இன்று சட்டத்திலே, சாத்திரத்திலே, சமுதாயத்திலே அடிமைகளாக, வேசிகளாக, கீழ்மக்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

விஞ்ஞான அறிவு இல்லாத பழங்காலத்தில், பெண்கள் என்ன நிலையில்இருந்தார்கள்என்பதைப் பழய நூல்களைப் புரட்டிப் பார்த்தால் இன்றும் காணமுடிகிறது. பண்டைப் பெண்மணிகள் வீரஞ்செறிந்தவர்களாய் வாழ்ந்தார்கள். வீரமக்களை யீன்று நாட்டுக்கு அளித்தார்கள் என்பதை அவைகள் விளக்குகின்றன. இன்றையப் பெண்கள் இந்த நிலையிலிருப்பதற்குக் காரணமென்ன? இவர்களுக்குத் தீங்கு யாரால் ஏற்பட்டது? எப்பொழுது ஏற்பட்டது? என்பதைச் சிந்தித்தால் உண்மை விளங்கும்.

ஆசியச் சமவெளியிலிருந்து ஆடு மாடுகளை ஓட்டிக் கொண்டு புல் தரை தேடி, இந்த நாட்டிற்கு ஓண்டவந்த கூட்டத்தினர், இங்கு ஆண்ட மக்களை அடிமைப்படுத்தி அறியாமையிலே ஆழ்த்தி அறிவை யிழக்கும்படி செய்து, சிந்தனையைச்சிதற அடித்தனர். ஆரியப் பார்ப்பனர் புகுத்திய இந்து மதமும், அதன் சாத்திரங்களுமே அவர்களின் கொடிய செயலுக்குச் சிறந்த கருவியாய் இருந்து வருகின்றது. செக்கில் கட்டிய மாடுகளைப் போல, இன்றையப் பெண்கள் உழலும்படி செய்து வைத்திருப்பதும் அதுவே. இதனைச் சிந்திக்கும் பண்புள்ள எவரும் மறுக்கமுடியாது.

அடிமை நாடாக இருப்பதினால்தான் பெண்களின் நிலைமை இவ்வாறு இருக்கின்றது. சுதந்தரம் கிடைத்தால் பெண்களுக்கும் விடுதலை யுண்டு. பெண்களுக்கு மட்டிலுமல்ல; "பறையருக்கும் இங்கு தீய புலையருக்கும் விடுதலை" என்று முழக்கினார்கள் நம் தேசியத் தோழர்கள்.

இன்று ஆரியப் பார்ப்பனர்களும் தேசியத் தம்பிகளும் சொல்லுகிறபடி ஆகஸ்ட்டு சுதந்தரம் வந்திருக்கின்றது. இன்னும் பெண்கள் நிலைமை இப்படியே இருக்கலாமா? இருக்க விட்டிருக்கலாமா?


எங்கேயாவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை கிடைக்குமா? அப்படி ஒருக்கால் விடுதலையானாலும் கூட, ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்காது என்று ஈரோட்டுத் தந்தை பெரியார் அவர்கள் கூறிவருவதைப் பெண்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகஸ்ட்டுச் சுதந்தரத்திற்குப் பின்னும் சமுதாயத் துறையிலே ஆரியனுக்கும், பொருளாதாரத் துறையிலே வட நாட்டானுக்கும், அரசியல் துறையிலே அவ்விரு கூட்டங்களுக்குமே அடிமைப்பட்டு, வாழ்ந்த இனம் வீழ்ந்து பட்ட நிலையிலிருந்து மீள முடியாதவாறு தடுமாறி நிற்பதையே பார்க்கின்றோம்.

இன உணர்ச்சியற்ற ஆண்கள்—அறிவுக்கு வேலை கொடுக்காத ஆண்கள்—உரிமைக்குப் போராட முடியாத ஆண்கள் நமக்கு உரிமை வழங்குவார்கள் என்பது நம் சிந்தனைக்கும் எட்டாத தூரத்திலேயே உள்ளது.

இளந் தோழியர்களே! நம்முடைய உரிமையை அடைய, அவ்வுரிமைக்குப் போராட,-என்- நம் நாட்டை மீட்க, நம் அரசை நிலை நிறுத்த நம்மை நாமே தயார் செய்து கொள்ள வேண்டும். புறப்படுங்கள்! பெரியார் பெரும் படையை நோக்கி. அமையுங்கள்! பெண்கள் படையை. அளியுங்கள்! முழு ஒத்துழைப்பை. "பெண்களால் முன்னேறக் கூடும் நம் வண்ட

(தொடர்ச்சி 15ம் பக்கம்)




### காட்சி 16.

[குடி ஜனங்களுள் பெரிய மனிதர்களைச் சேவகன் தசரதன் தர்பாருக்கு அழைத்து வருதல்.]

**சேவகன்:-** (அழைத்து வந்த குடி ஜனங்கள் அரசன்முன் வந்து வணங்கிநிற்க) மகராஜ்! அழைத்து வந்து விட்டேன்.

**தசரதன்:-** (புன்னகையுடன்) குடிகளே! அமருங்கள்! எனக்கு வயதாகி விட்டது. இராஜ்ஜியத்தை இளவரசுக்குப் பட்டம் கட்டி விடலாம் என்று கருதுகிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

**குடிகளுள் ஒருவர்:-** மிகவும் நல்ல யோசனை! மகாராஜா! அப்படியே செய்யுங்கள். (அனைவரும் தலையை ஆட்டி அதற்கு உடன்படுகின்றார்கள்.)

**மற்றொருவர்:-** இளைய மகாராஜா அவர்கள் இப்போது சில நாளாக மிக மிக நல்லதனமாய் நடந்து வருகிறார். எங்கள் மீது அவருக்கு மிக மிக அன்பு.

**தசரதன்:-** சந்தோஷம்! உங்கள் விருப்பப்படியே செய்வோம். நீங்கள் செல்லலாம். (என்று கூற வந்த குடி மக்கள் வணங்கிச் செல்கின்றனர்) மந்திரிமார்களே! குடிகளுடைய சம்மதியும் கிடைத்து விட்டது. இனிச் செய்ய வேண்டியது என்ன இருக்கிறது?

**தலைமை மந்திரி:-** இனிச்செய்ய வேண்டிய காரியமெல்லாம் முடி சூட்டு விழா நடக்கவேண்டியதே யாகும்.

**தசரதன்:-** இனி இதற்குக் காலம் நீடிக்கக் கூடாது. எப்பொழுது முடி சூட்டுப் பேச்சு வெளியில் வந்ததோ, அப்பொழுதே முடி சூட்டு நடந்தாக வேண்டும். தாமதம் ஏற்பட்டால் ஆபத்தாய் முடியும். ஆதலால் நாளையே நடக்க வேண்டியதுதான். இந்த விஷயம் இப்போது கைகேயிக்குத் தெரிய வேண்டியதில்லை.

**மந்திரிகள்:-** ஆம் மகாராஜ்! அப்படியே செய்து விடுவோம்.

**தசரதன்:-** நமது குரு வசிஷ்டரைக் கூப்பிட்டனுப்புவோம்!

**மந்திரி:-** சேவகா! நமது குரு வசிஷ்டரை உடனே அழைத்து வா!


[வணங்கிச் சென்ற சேவகன் திரும்ப ஓடி வந்து]

**சேவகன்:-** இதோ அழைத்து வந்து விட்டேன்.

**தசரதன்:-** (வசிஷ்டர் வருகையைக் கண்டு) குரு மகாராஜ்! நமஸ்கரிக்கின்றேன் (என்று எழுந்து நின்று கூற.)

**வசிஷ்டர்:-** மங்களமுண்டாகட்டும்! (என்று கூறித்தனது ஆசனத்தில் சென்றிருக்கத் தசரதனும் அமர்ந்து கொள்ள) என்னை இவ்வளவு அவசரமாக மகாராஜா அழைத்த விஷயம் என்ன?

**தசரதன்:-** குரு மகாராஜ்! பரதன் வருவதற்குள் நம் இராமனுக்கு முடி சூட்டியாக வேண்டும். மற்றப்படி எல்லா விபரமும் தாங்கள் அறிந்தது தானே! குடிகள் சம்ம




தமும் பெற்றாகி விட்டது. மந்திரிகள் சம்மதமும் பெற்றாகி விட்டது. முடி சூட்டு நாளையே நடந்தாக வேண்டும். தாங்கள் ஒரு நேரம் குறிப்பிடுங்கள்.

**வசிஷ்டர்:-** மகாராஜா! இப்படிப்பட்ட காரியங்களுக்கு நேரம்—காலம்—முகூர்த்தம் என்னத்திற்காகப் பார்க்கவேண்டும். "ததேவ லக்கினம்" என்றபடி சௌகரியப்பட்ட நேரத்தில் முடிக்க வேண்டியதுதான். ஆதலால் நாளை மாலை முடித்து விடலாம். அதுவே சரியான முகூர்த்தம்.

**தசரதன்:-** மிகவும் சரி! அப்படியே செய்வோம். மந்திரிகளோடு குரு மகாராஜ் உடன்கலந்து முடி சூட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அழைப்பு அனுப்புவதில் திராவிடம் முதலிய தேசத்தரசர்களுக்கும் அனுப்புங்கள். கேகய மன்னனுக்கும் ஜனகனுக்கும் அழைப்பு அனுப்பாதீர்கள். இவர்கள் வந்தால் முடி சூட்டுக்கு ஆபத்து வரலாம். கைகேயிக்கும் முடி சூட்டு விஷயம் நடைபெறும் வரை தெரியவேண்டாம். சுமந்திரரே! நீர் போய் இராமனை அழைத்து வாரும். [சுமந்திரர் செல்ல, காட்சி முடிகின்றது.]

### காட்சி 17.

இராமன் வீடு.

**சுமந்திரன்:-** இராமா! உன்னை மகாராஜா அழைத்து வரும்படி கட்டளையிட்டார். மிக அவசரம்!

**இராமன்:-** என்ன விசேஷம்! சுமந்திரரே! மிக மிக அவசரமாக்கும். இதோ வருகின்றேன்.

(காட்சி முடிகிறது)

### காட்சி 18.

[தசரதன் தனியே ஆலோசித்தபடி உலாவிக் கொண்டிருக்கின்றான்.]

**இராமன்:-** தந்தையே! நமஸ்காரம். என்னை இவ்வளவு அவசரமாக அழைத்த விஷயம் என்ன? கட்டளை இடுக!

**தசரதன்:-** இராமா! முன் உனக்குச் சொன்னபடி நாளை உனக்கு முடி சூட்டத் தீர்மானித்திருக்கிறேன். குடிகளிடமும் சம்மதம் வாங்கி விட்டேன். பரதன் பாட்டன் வீட்டிற்குப் போய் நாளாகி விட்டது. திடீரென்று என்றாவது வந்து விடுவான். அதற்குள் உன் முடி சூட்டுதல் நடந்தால் தான் உண்டு. இல்லா விட்டால் ஆபத்துதான். பரதன் வருவதற்கு

குமுன் நடந்து விட்டால் பிறகு பரதன் வந்தாலும், அவன் மிகவும் உத்தம புத்திரன் ஆனதால், நடந்தது நடந்து போகட்டும் என்று சும்மா இருப்பான். அன்றியும் உள் இரகசியம் வெளியில் தெரிந்தால் குடிகள் புத்தியும் மாறி அவர்கள் இந்த முடி சூட்டை எதிர்த்தாலும் எதிர்ப்பார்கள். அவர்களை நம்பக்கூடாது. எனவே விஷயம் வெளியாவதற்குள் நாளையே முடி சூட்டு நடக்க வேண்டும். நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டியதில்லை. பரதன் இல்லாத நாளே நல்ல நாள்.

**இராமன்:-** தங்கள் சித்தம் என் பாக்கியம். அப்படியே செய்யுங்கள்.

**தசரதன்:-** நீ உடனே வீட்டிக்குப் போய் நீயும் சீதையும் இன்று முதலே விரதம் பூசை முதலியன நடத்தி உபவாசமிருங்கள்.

**இராமன்:-** அப்படியே நடக்கின்றேன், தந்தையே! (என்று கூறி இராமன் செல்ல)

**தசரதன்:-** (தனக்குத் தானே பேசிக் கொள்ளுகின்றான்) இந்தக் காரியம் நாளை விக்கினமில்லாமல் நடக்குமா? அல்லது ஏதாவது ஆபத்து வருமா? எவ்வளவோ முன்யோசனையோடு தான் செய்கிறேன். என்னமாய் முடியுமோ தெரியவில்லை. இருந்தாலும் இருக்கட்டும். இனி என்ன நடந்து விடப்போகின்றது? இன்று இரவு ஒரு நேரம் தானே. நாளைக்கு காரியம் நடந்துவிடப் போகிறது. குடிகள், மந்திரிகள், குரு ஆகிய எல்லோருமே நம்ம பக்கம் இருக்கின்றார்கள். கைகேயிக்கோ இந்த விஷயம் தெரியாது. இனி நமக்கு எதிரி யார்? என்று தன்னைத் தானே கேட்டு முடித்து சுமந்திரனை நோக்கி)

சுமந்திரரே! இராமனைச் சீக்கிரம் போய் அழைத்து வாரும்.

**சுமந்திரன்:-** அப்படியே!

(காட்சி முடிகிறது)

## காட்சி 19.

### இராமன் வீடு.

**சுமந்திரன்:-** இராமா! உனது தந்தை உன்னை அழைத்து வரும்படி சொன்னார்.

**இராமன்:-** (திடுக்கிட்டு மனங்கலங்கி) எதற்காகக் கூப்பிடுகிறார்? முடி சூட்டுக்கு ஏதாவது ஆபத்து வந்து விட்டதா என்ன? மறுபடியும் கூப்பிட்டதைப் பார்த்தால் எனக்கு மிகவும் பயமாய் இருக்கிறது. உண்மையைச் சொல்லும் சுமந்திரரே!

**சுமந்திரன்:-** இளவரசே! எனக்கொன்றும் தெரியாது. உம் தந்தை ஏதோ யோசித்துக் கொண்டு உம்மை உடனே அழைத்து வரச் சொன்னார்.

**இராமன்:-** (மிகுந்த சஞ்சலத்தோடு) சரி போவோம் வாரும்!

## காட்சி 20.

### தசரதன் இருக்கை.

**இராமன்:-** தந்தையே! என்னைத் தாங்கள் மறுபடியும் அழைத்த விஷயம் என்ன?

**தசரதன்:** விசேஷம் ஒன்றுமில்லை. முடி சூட்டு விஷயத்தில் என் மனம் ஒரு மாதிரி பயம் அடைகின்றது. இவ்விஷயம் அவசரத்தில் முடிந்து ஆகவேண்டுமென்பதற்காகவே சில விஷயங்களைச் சொல்ல உன்னை வரவழைத்தேன். விஷயம் என்னவென்றால், பரதன் வருவதற்குள் முடிந்துவிடவேண்டும் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன் அல்லவா? இந்தச் சங்கதி முடி சூட்டுக்கு முன் வெளியில் தெரிந்தால் பரதனைச் சேர்ந்தவர்கள் உனக்கு ஏதாவது அபாயத்தை உண்டாக்க முடியும். ஆதலால் நீ மிகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். முடி சூட்டு நடக்கும் வரையில் உன்னைச் சுற்றிலும் காவலர்களை வைத்து உன்னைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள். நல்ல காரியத்துக்குக்கூட எத்தனையோ தடைகள் உண்டு. இதற்குச் சொல்லவேண்டுமா? ஆதலால் காரியம் இரகசியமாய் இருக்கட்டும். உன்னைப்பற்றி ஜாக்கிரதையாயிரு.

**இராமன்:-** தந்தையே! தங்கள் கருத்தைப் புரிந்து கொண்டேன். தங்கள் கட்டளைப்படியே நடந்து கொள்ளுகிறேன். சென்று வருகிறேன். நேரே வீட்டுக்கே செல்லுகிறேன்.

(காட்சி முடிகிறது.)

## காட்சி 21.

### கோசலை வீடு.

**இராமன்:-** அம்மா! மகாராஜா நாளைக்கு எனக்கு முடி சூட்டப் போகின்றார்.

**கோசலை:-** இராமா! நான் செய்த தவம் விரயம் போகுமா? இரவும் பகலும் இதே கவலையோடு எவ்வளவோ பூசை பிரார்த்தனைகளோடு இருந்து வந்தேன், அது இப்போதே பலித்தது. கைகேயியின் ஆணவம் நாளையோடு ஒழிந்தது. அவளை மூலையில் உட்கார வைத்து விட்டேன் என்றே நினை. இனி நமது இராஜ்ஜியம் தான்! எல்லாம் நமது ஆட்சி தான். (என்று கூறித் தனக்குத் தானே "அடங்குகிறாயா கைகேயி, ஒழிந்தது உன் ஆணவமெல்லாம் என்று பேசிக் கொள்கின்றாள்)

**இராமன்:-** (சீதையைப்பார்த்து) சீதையே எனக்கு நாளைக்கு முடி சூட்டு நடக்கப்போகிறது.

**சீதை:-** (இராமனைக் கட்டித் தழுவி) இனி நீதான் சக்கரவர்த்தி. நான் தான் சக்கரவர்த்தினி.

**இராமன்:-** தந்தை நம் இருவரையும் உபவாசம் இருக்கச் சொன்னார். வீட்டு நோன்பு முதலியன செய்.

**சீதை:-** நாதா! நான் எப்போதுமே இதற்காக நோன்பு இருக்கின்றேன். கவலைப்படாதீர்கள்.

(காட்சி முடிகிறது.)

## காட்சி 22.

[கைகேயி வீடு. உப்பரிகையின் மீது மந்தரை துணி உலர்த்திக் கொண்டிருக்கின்றாள். கோசலை வீட்டு வேலைக்காரி மைத்திரி அலங்காரத்துடன் அங்கு வருகின்றாள்]

**மைத்திரி:-** என்னடி! இப்படி இருக்கிறாய்! பழைய துணிகளை உலர்த்திக் கொண்டு என்னமோ மாதிரி அசிங்கமாய் இருக்கிறாயே! உன் வீட்டைப் பார்த்தால் பாழடைந்த வீடுபோல் இருக்கிறதே! உங்கள் வீதியோ "வெறிச்" சென்றிருக்கிறதே!

**மந்தரை:-** வாடி மைத்திரி! என்ன! என்னமோ பிதற்றுகிறாய்! உன்னைப் பார்த்தால் நல்ல புதுப் பெண் மாதிரி இருக்கிறது! நகை என்ன! உயர்ந்த புடவை என்ன! என்னடி விசேஷம்! இதெல்லாம் உனக்கு ஏதடி?

**மைத்திரி:-** எங்கள் மகாராணி கோசலை அம்மாள் கொடுத்தார்கள்.

மந்தரை:- அடி! இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது. உங்க இராணி அம்மாள் எச்சில் கையால் காக்காய் ஓட்டமாட்டார்கள். அவ்வளவு அழுத்தக்காரியாச்சுதே! யாருக்கும் ஒரு காசுகூட கொடுக்க மாட்டாளே! ஏது ஈதெல்லாம் கொடுத்தது?

[தொடர்ச்சி 13ம் பக்கம்]

சினிமா விமர்சனம்:

# "பைத்தியக்காரன்"

ஓ. எம். சுப்பிரமணியன்

★

தமிழனாகப் பிறந்துவிட்ட பெருங் குற்றத்துக்காக எவ்வளவு துன்பங்களைத்தான் சகித்துக்கொள்வது! அரசியல் பொருளாதார சமுதாயத்துறைகளில் பார்ப்பன-பனியாக் கூட்டாட்சிக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் அந்த நிலைமையைக்கூடச் சமாளித்துக் கொள்ளலாம். ஆனால் கலை யென்னும் பேரால் தமிழ்ப்பட உலகில் நடைபெற்றுவரும் அட்டூழியங்களை எவ்வளவு காலந்தான் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்?

"பரமசிவன் அருள்புரிய வந்து, வந்துபோவார், பதிவிரதைக் கின்னல் வரும், பழையபடி தீரும்!" என்று புரட்சிக் கவிஞரால் நையாண்டி செய்யப்பட்டுள்ளவாறு, தமிழ்ச்சினிமாவின் கர்த்தாக்கள் போட்டி போட்டுக் கொண்டு மீண்டும் மீண்டும் புராணக் குப்பைகளைக்கிளறி, ஒரே கதையைப் பலமுறையும், பெயர் மாற்றியும் படமாக எடுத்து மக்களைப் பைத்தியக்காரராக்கினர். இனி புராணத்தில் ஒன்று கூட மீதமில்லை என்ற நிலை வந்ததும், இந்தியா "சுதந்தர" மடைந்ததும் ஒரே காலமாக நேரவும், எல்லாப் படங்களிலும் "ஜே ஹிந்த்" "வந்தே மாதரம்" "பாரத மாதா" காந்தி, நேரு, 'போஸ், பாரதி ஆகியோரின் சிலைகளும், படங்களும் தவறாமல் இடம்பெறத் தொடங்கின. மக்களை எப்படியாவது மயக்கிப் பணப்பெட்டியை நிரப்பும் பணியிலிறங்கிய படமுதலாளிகளின், இந்தத் தகிடுதத்த வேலையும் நாளடைவில் மக்களுக்குத் தெரியவந்தது. எனவே இனிமேல் சமூகப்படங்களைத் தவிர வேறு எதற்கும் மதிப்பிராது என்ற நிலை, காலத்தின் வேகத்தால் எப்படியோ வந்துவிட்டது. அதன் காரணமாகத்தான் "துணிந்து புனைந்த புதுமைச் சித்திர" மான "மிஸ். மாலினி" களும் "சமூகச்சித்திரங்க" ளான "நாம் இருவர்" களும் ஏராளமாக வெளியாகியும் "சமூகம்" என்ற பேரால் மக்களைத் திருப்திப்படுத்த முடியவேயில்லை.

இருள்செறிந்த நள்ளிரவில் அடர்ந்த காட்டினூடே வழி தெரியாமல் தட்டுத் தடுமாறி நடந்து அலுத்துப்போன தமிழனுக்கு, நம்பிக்கை ஒளி தெரியாமலும் போகவில்லை. 'அதோ! அடிவானத்தில் விடி வெள்ளி தோன்றி விட்டது. அதுதான் "பைத்தியக்காரன்" படத்தணிக்கைக் குழுவினர் (Senser Board) எவ்வள்வு படுமோசமாகக் கத்தரிக்கோல் பிரயோகம் செய்தும், பார்ப்பனப்பத்திரிகைகள் "பைத்தியக்கார' னைநாட்டில் உலவவிடுவதேஆபத்து, இந்நுமதமே போச்சு என்று ஒருமுகமாகக் கூப்பாடு போட்டும், "பைத்தியக்காரன்" ஊரூராய் "ஓடி" மக்களைச் சீர்திருத்தப் பைத்தியங்களாக மாற்றத் தயங்கவில்லை.

சமூகப்படம், சமூகப்படம் என்று தணியாத தாகம்கொண்டு தவித்த தமிழர்களுக்கு ஓரளவு ஆறுதல் தரக்கூடிய வகையிலே அமைந்த முதல்தரப் படமே "பைத்தியக்காரன்" என்று தைரியமாகத் துணிந்து கூறலாம். கதையமைப்பும், நடிப்பும், பேச்சும், பாடலும், பிற அம்சங்களும் மிக உயரிய முறையில் வாய்ந்து தமிழ்ச்சமூதாயம் அறிந்து சீர்திருந்தும் முறையில் சிறப்பாக அமைந்துள்ளது இப்படம்.

பழமைக்கும், போலிக்கௌரவத்துக்கும், மூடப் பழக்கவழக்கங்களுக்கும் பிரதிநிதியான ஆறுமுக முதலியார், தமது வாழ்க்கையில் செய்த இரு பெருந்தவறுகளினால் அவர் குடும்பம் சீரழிகிறது. ஒரே மகன் பைத்தியக்காரனாகிப் பரிதாப முடிவடைவதும், ஒரே மகள் இளம் விதவை-கற்பிழந்து கைவிடப்பட்ட நிலையில் மரணமடைவதும், இரண்டாம் மனைவி, மகளாக மாறித் தன் பழைய காதலனையடைவதும், விபூதியும் ருத்திராட்சமும் அணிந்தவர்கள் செய்யும் புரட்டுகளும் திருட்டுகளும், குடும்பங்களைக்கெடுக்கும் கோணல்'புத்தியும், 'பரந்த அனுபவம்' குருசாமிப்பிள்ளை மூலம் வெளியாவதும் ஆகிய சம்பவங்கள் நாட்டு நிலையின் உண்மையான படப்பிடிப்புகளாகும். வேலைக்காரச் சனியயின் இயற்கையான கிண்டலும், சீர்திருத்தமெனும் கசப்பு மருந்தை, நகைச்சுவையெனும் இன்பத்தேனில் குழைத்துத் தரும் விதமும் இப்படத்தின் தனிச் சிறப்புகளாம்.

நகைச்சுவையரசரின் அறிவுவிருந்து ஒருபுறமிருக்கப் படத்தின் இதர பாகம் முழுவதுமே சமுதாய ஊழல்களைச், சாத்திர ஆபாசங்களை இடித்திடித்துக் கூறி, உண்மையான சீர்திருத்தத்துக்கு வழிகோலும் வகையில் புரட்சி நோக்கும், உணர்ச்சி வேகமும் கொண்டு போற்றக்கூடியதாக இருக்கிறது.

நகைச்சுவை யரசர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் புதுத் தொடர்ச்சியில் முதல்படமான "பைத்தியக்கார"னில் அவர் தனியாக நடித்து அதன் மூலம் அவர் தமிழினத்துக்குச் செய்திருக்கும் தொண்டு மறக்கமுடியாதது. "தனியொருவனுக்கு உணவிலை யெனில் ஜகத்தினை யழித்திடுவோம்" என்றபாரதிபாடலை தோழர்என். எஸ். கே.கூறியதும்,அதற்குப் பதிலாகத் தோழியர் மதுரம், பெரியார் அவர்களின் கருத்தை யொட்டி. "ஒரு மனிதனுக்கு உணவில்லாவிடில் யாராவது அளித்தால் போதுமே! அதற்காக உலகத்தையழிப்பது வீணல்லவா?" என்று கூறுவதும், "பெரியமனிதர்கள் அடிக்கடி பிறந்தநாள் கொண்டாடுவது எதற்காக? என்று தோழியர் மதுரத்தின் வினாவுக்கு "எல்லாம் வருமானத்திற்காகத்தான்" என்று என். எஸ். கே விடையளிப்பதும், தயிர் கடைவதற்கும், பரத நாட்டியத்திற்கும் கலையுள்ளத்தோடு ஒற்றுமை கற்பிப்பதும், சிறையனுபவத்தைக் குறித்து அருமையான கருத்துக்களை வெளியிடுவதும், "கும்பிடக் கோயிலே இல்லீங்க, அது ஒரு குறையா சொல்லுங்கோ" என்பதும், "சிறையில் மொட்டையடிப்பார்களா? என்ற கேள்விக்கு" அது என்ன பழனிக்கோவிலா? அல்லது திருப்பதி மலையா? என்று கூறுவதும், பணக்காரர்களுக்கு வாழ்க்கையில் திருப்தியும் இன்பமும் இல்லையென்பதை எடுத்து காட்டுவதும்,பெண்களின் நகைப்,பைத்தியத்தையும், வீண் ஆடம்பரத்தையும் போலிநாகரிகத்தையும் கிண்டல் செய்வதும், எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் சீர்திருத்தத் திருமணங்குறித்துப் பிரசங்கம் செய்து, நடந்து காட்டுவதும் ஆகிய செயல்கள் மூலம், திராவிட நாட்டுச் சமுதாயச்சீர்திருத்தவாதிகளில் முதலிடம் தேடிக் கொள்கிறார் தோழர் என். எஸ். கே.

படம் முழுவதிலும் எந்த இடத்திலும் அலுப்புத் தட்டாமல் விறுவிறுப்பாக ஓடுகிறது. அத்தனை நடிகர்களும் அணுவளவும் பிசகாமல் இயற்கையாக, ஏற்றுக் கொண்ட குணச்சித்திரங்களுக்கேற்ப, உணர்ச்சியுடன் நடிக்கிறார்கள், பேசுகிறார்கள், உள்ளமுருகப் பாடுகிறார்கள். படப்பிடிப்பும், ஒலிப்பதிவும், காட்சி ஜோடனைகளும் பிறவும் அற்புதம்.

இவ்வளவு முதல்தரமான படத்தில் சிற்சில குறைகளும் இல்லாமற் போகவில்லை. விதவை மணத்தைக் குறித்து அநேக ஆண்டுகளாய்ப் பிரசாரம் செய்து இயக்கத்தின் முக்கிய கொள்கைகளுள் ஒன்றாகக் கொண்டு, நடைமுறையில் பல விதவை மணங்களை நடத்திக் காட்டிவரும் சீர்திருத்த இயக்கமான சுயமரியாதை இயக்கம் இருந்து வரும் இந்நாட்டில், எதோ ஒரு இடத்தில் காந்தியார் பேசியதையும், பாரதியார் பாடியதையும் மட்டும் மேற்கோளாக எடுத்துக்கொண்டிருப்பது நன்றிகெட்ட காரியம். படத்தில் பல இடங்களில் சம்பந்தமில்லாது காந்தியார் உருவச்சிலை,பாரதமாதா படம், நேரு, போஸ் படங்கள், பாரதியார் சிலைஆகியவை காட்டப்படுகின்றன.

இதற்கு அவசியம் என்ன? கதையின் முடிவு சோகரசமாயிருந்தும், கதையின் போக்கு (Trend) கெடும் முறையில் இறுதியில் உள்ள அபிநயக்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# செய்தியும்—சிந்தனையும்.

[பொறுக்கி]

● அகலாபுரத்தில் சிலர் மாண்டது உண்மையே. ஆனால் பட்டினியால் மட்டும் அவர்கள் இறக்கவில்லை. சாப்பிட வழியில்லாததால் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாத சில பதார்த்தங்களை அவர்கள் உண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் மாண்டிருக்கிறார்கள்.

வி. எஸ். ஹெஜ்மாடி.
சென்னை சிவில் சப்ளை காரியதரிசி.

மாண்டது உண்மை. ஆனால் பட்டினி காரணம் இல்லை. ஒத்துக் கொள்ளாத பதார்த்தம் உட்கொண்ட காரணம் என்கிறார் சப்ளை காரியதரிசி. பட்டினி கிடந்து பொறுக்க முடியாமல் ஒருவன் தற்கொலை செய்து கொண்டால், அவன் இறந்ததற்குக் காரணம் பட்டினி யல்ல, தற்கொலை என்று கூறுவார் போலும். இம்மாகாணத்தில் ஒருவர் உணவு இல்லாமையால் இறந்தார் என்றால், அவருக்கு முன் நான் இறப்பேன் என்று உணவு மந்திரி ராஜன் சில நாட்களுக்கு முன்பு கூறியது நமக்கு ஞாபகம் வருகிறது. ஆனால் அவருக்கு அவ்வாறு கூறினோமே என்று ஞாபகம் இல்லை என்பது, மட்டும் உறுதி. ஏனென்றால் ஞாபகமிருந்தால், நாமுமல்லவா அநுதாபம் தெரிவித்திருப்போம்?

*　　*

● திருச்செந்தூர் செந்திலாதிபனுக்கும் ஆறுமுகனார்க்கும், ராஜாஜியின் பெயரால் அர்ச்சனை செய்து, ராஜாஜீ நீடூழி காலம் வாழ வேண்டுமெனப் பிரார்த்தனையும் செய்து, விபூதி பிரசாதத்தை தோழர் நாராயணன், ஏர் மெயிலில் அனுப்பியிருக்கின்றார்.

"செய்தி"

மண்ணைச்சாத்துகிற ஆச்சாரியாருக்குச் சாம்பலை யனுப்பி யிருப்பது ஒரு புதுமை. அச்சாம்பலை ஏர் மெயிலில் அனுப்பி யிருப்பது அதைக் காட்டிலும் புதுமை. இன்னும் சில நாட்களில் பித்தளைச் சாமிகள் எல்லாம் இரத்தமாட ஆகாய விமானத்தில் சென்றன என்று செய்தி வந்தால் நாம் ஆச்சரியப்பட மாட்டோம். ஏனென்றால் ஆகஸ்ட்டு சுதந்தரம் பெற்ற நாடல்லவா?

*　　*

● பாலும் தேனும் ஓடிய நாடாக ஒரு காலத்தில் இந்தியா இருந்தது. அந்த நாள் மீண்டும் ஏற்பட நாம் முயற்சிக்க வேண்டும்.

"ராஜேந்திர பிரசாத்"

இந்தியா என்பதே கற்பனை. அதைக் காட்டிலும் எண்ணிக்கைக்கு அடங்காத மடங்கு கற்பனை, இந்தியாவில் பாலும் தேனும் ஓடியது என்று கூறுவது. ஆரியர்கள் வருகைக்குப் பின், நெய் நெருப்பில் கொட்டப் பட்டது என்பது வேண்டுமானால் உண்மை. ஆனால் அதுவும் கூட, உழைக்கும் மக்களின் உடல், வலிமை பெற்றிருக்கக் கூடாது என்ற வஞ்சகத்தினால் செய்யப்பட்டதே தவிர, நெய் ஆறாகவோ, நெய்க்கடலாகவோ இருந்ததில்லை என்பதையும், பாலும் தேனும் ஓடியிருந்தால் பரம முட்டாள்களாக இருந்தார்கள் என்றே பொருளாகின்றது என்பதையும், காவடி தூக்கும் மந்திரிகள், மறுமுறை காவடி தூக்கும் போதாவது காங்கரஸ் தலைவருக்கு விண்ணப்பித்துக் கூறுவார்களாக!

*　　*

● [லேடி மவுண்ட் பேட்டனை நோக்கி] இந்தப் பித்தானை அமுக்குவதன் மூலம் கழகக் கதவுகளைத் திறந்து வைப்பீர்! இம்மாதிரியே கோடிக்கணக்கான இந்திய மக்களுக்கு அறிவொளி கிடைக்கா வண்ணம் தடுத்த இருட்டு அறியாமை என்ற கதவுகள் சீக்கிரம் திறக்கப்படும்.

அபுல் கலாம் ஆசாத்.
"மத்திய கல்வி மந்திரி"

பாலும் தெளிதேனும், பாகும், பருப்பும் கொடுத்து, பிள்ளையாரிடமிருந்து முத்தமிழையும் பெறலாமென்று முன்பு தமிழ் நாட்டில் ஒருவர் சொல்லிவிட்டுப் போயிருக்கின்றார். அதைக் காட்டிலும் நீங்கள் கூறும் முறை நன்றாயிருக்கிறது என்று அவ்வையார் பாராட்டுக் கூறலாம்.

*　　*

● ரொடிஷியா என்ற ஊரில் உள்ள ஆற்றில் தாமஸ் வாட்ஸ் என்ற 14 வயதுச் சிறுவன் விளையாடிக் கொண்டிருக்கும் போது ஒரு முதலை கவ்விக் கொண்டது. அவன் நண்பன் நீரில் இறங்கி முதலையைத் தாக்கினான். முதலை வாட்ஸை விட்டு அவன் கொண்டு வந்த ரப்பர் டியூப்பைக் கவ்விக் கொண்டதால் அவன் உயிர் தப்பினான்.

"தளோப்"

பு. ம. களுக்கு நல்ல சந்தர்ப்பம்! ஒரு புராணமே பாடிவிடலாம்! ரப்பர் ட்யூப்பை விஷ்ணு சக்கிரமாகக் கொள்ளலாம் என்பது நம்யோசனை.

*　　*

● பிற்காலத்திலும் சர்க்காரை கட்டுப்படுத்தி, இப்பொழுதே கோவில்களுக்கு நிரந்தரமாக அதிகமான நஷ்டஈடு கொடுக்கலாமென்று ஒரு அங்கத்தினர் கூறினார். இதிலிருந்து கருஞ் சட்டையினரின் ஆதிக்கம் ஏற்பட்டுவிடுமென்று அவர் பீதி அடைந்து விட்டதாகத் தோன்றுகிறது. அத்தகைய நிலைமை ஏற்படாது.

"முத்துரங்க முதலியார்"
சட்ட சபையில்

வெள்ளைச் சட்டைகளே கருஞ் சட்டையாக விரைவில் காலப்போக்கில் மாறுவது இயற்கை. ஆனால் முத்து ரங்கங்கள் போன்ற முத்தண்ணாக்கள் இந்நாட்டில், சட்ட சபைக்குச் சென்று கொண்டிருக்கும் வரை அத்தகைய நிலைமை ஏற்படாது என்பதை நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம்.

*　　*

● திருப்பதி கோயில் நிலங்களுக்கும் தக்கபடி நஷ்ட ஈடுகொடுக்கவேண்டும். ஏனென்றால் வெங்கடேஸ்வரப் பெருமாள் ஜமீன்தார் அல்ல.

"கே. வெங்கடசாமி நாயுடு"

வெங்கடேஸ்வரப் பெருமாள் ஜமீன்தார் அல்ல என்பதுண்மைதான். ஏனென்றால் எந்த ஜமீந்தாருக்காவது 10-லட்ச ரூபாயில் வைரக் கிரீடம் இருக்கிறதா? ஆதலால் பெருமாளை ஜமீந்தார் வரிசையில் சேர்க்காமல், அதாவது நஷ்ட ஈடு கொடுக்கும் வகையில் சேர்க்காமல், பெருமாள் வரிசையிலேயே சேர்க்கவேண்டியதுதான் நியாயம். ஆனால் நியாயம் என்ன விலை என்றல்லவா இந்தஆட்சியில் கேட்க வேண்டியிருக்கிறது.?

*　　*

● உங்களுக்கு எல்லாவற்றையும் சர்க்கார் செய்யும் என்று எண்ணிக் காத்திராமல், சமூகத்தின் முன்னேற்றத்திற்கு நீங்களே வேலை செய்ய வேண்டும்.

"ராஜேந்திர பிரசாத்"

சமூக முன்னேற்றத்திற்குச் சரியான மார்க்கம். ஆனால் சர்க்காருக்கு என்ன வேலை?..................

*　　*

● நாம் சரியான முறையில் பிரச்னைகளைப் பரந்த நோக்கத்துடன் ஆராய்ந்தால், உலக நாடுகளிடையே நாம் தலைமை ஸ்தானம் வகிப்போம் என்பதில் அய்யமில்லை.

பண்டித நேரு.

ஏகாதிபத்திய வாதிகளின் கனவைச் சித்தரித்த தேசியத் தோழர்களே! இதற்கு என்ன அர்த்தம்?

*　　*

● ஆலயப் பிரவேசச் சட்டம் வந்து வெகுநாட்களாகியும், இதுவரை நாகப்பட்டிணம் சௌந்தர ராஜப் பெருமாள் கோவிலுக்கு, ஆதித் திராவிடர்கள் தரிசனத்திற்கு வரவில்லை.

"செய்தி"

ஆதித் திராவிடர்களின் குறைகள் ஆலயத்தைத் திறப்பதால் தீராது என்பதை இப்போதாவது சர்க்கார் உணர வேண்டும். ஆனால் உணர்ச்சியை அடகு வைத்து விட்டு ஊரை ஏமாற்றக் கதவைத்திறந்தவர்களிடம் அதை எப்படி எதிர்பார்க்கலாம்?

## புலிவாயிலி'ருந்து தப்பினான்!

வலாடிவாஸ்டாக், டிச. 22.

தன் கிராமத்திற்கு வெளியே உள்ள ஒரு ஆட்டுத்தொழுவில் ஒரே கூக்குரல் சப்தம் கேட்டு ஒரு குடியானவன் வேகமாக ஓடி இரண்டு வேட்டைக்காரர்களை எழுப்பினான்.

அந்த இரு வேட்டைக்காரர்களும் தொழுவை நோக்கி ஓடினார்கள். அங்கே அவர்கள் ஒரு புலியைக் கண்டனர்! அந்தப் புலி ஒரு ஆட்டை வாயில் கவ்விக்கொண்டு இருந்தது.

வேட்டைக்காரர்களில் ஒருவரான ஸ்மிஸ்லாவ் குறி பார்த்துப்புலியைச்சுட்டான். புலிக்குக்காயம்பட்டதே தவிர சாகவில்லை. புலி உடனே ஆட்டை விட்டுவிட்டு மற்றொரு வேட்டைக்காரரான கிரிஷ்கோ மீது பாய்ந்து அவனைக் கவ்விக்கொண்டு காட்டிற்குள் ஓடியது. புலியின் பின்னாலேயே மறுபடியும் குறிபார்த்துக்கொண்டு ஓடினார் ஸ்மிஸ்லாவ். நூறு கஜ தூரம் போனதும் புலி சிறிது நின்றது. ஸ்மிஸ்லாவ் மறுபடியும் சுட்டான் புலி செத்து விழுந்தது. கிரிஷ்கோ புலி வாயிலிருந்து காப்பாற்றப்பட்டான்!

---

● உண்மையில் சங்கீதத்தில் ஆர்வம் இருப்பவனுக்குத் தூய்மையான சீலம் நிறைந்த வாழ்க்கைக்கு வழி தெரிகிறது.

டி. இலட்சுமணப் பிள்ளை.

வழி தெரியுமோ என்னமோ நமக்குத் தெரியாது. ஆனால் தூய்மையான சீலம் நிறைந்த வாழ்க்கையில் ஒழுகும், சங்கீத ஆர்வம் உடையவரை உலகத்திலேயே கண்டுபிடிக்க முடியாது. தப்பித் தவறி உலகத்திலே கண்டு பிடித்துவிட்டாலும் தமிழ் நாட்டிலே காணவே முடியாது என்பது உறுதி. ஆனால் தூய்மையானசீலம்நிறைந்தவாழ்வுஎன்பதை எந்த அர்த்தத்தில் கூறினாரோ?

*　　*

● இந்திய மக்கள் வகுப்புத் துவேஷத்தைக் கைவிடா விட்டால், பண்டைக்காலத்தில் குடியிலும் விபசாரத்திலும் காலத்தை விரயம் செய்து ஒருவரை யொருவர் வெட்டிக்கொண்டு மாண்ட யாதவர்களின் கதிதான் ஏற்படும்.

காந்திஜீ.

பண்டைக் கால மென்பது கலியுகமா? இரேதா யுகமா? எந்தக் காலம்? அந்தக் காலத்தில் கூடவா குடியும் விபசாரமுமிருந்தது காந்திஜீ? என்று எடுத்ததற்கெல்லாம், இப்படி அக்கிரமம் அந்தக் காலத்தில் இருந்ததில்லை! இது கலியுகமல்லவா? எனப் பேசும் வைதீகத் தோழர் கேட்கலாமல்லவா?

# என் இந்தப் பித்தலாட்டம்?

★

காங்கரஸ் சர்க்கார் பொது மக்களுக்கு உருவான காரியம் எதுவும் செய்யாமல் போனாலும், ஏதோ பிரமாதமாகத் தங்களுக்குத் தமிழ் உணர்ச்சி இருப்பதாகப் பொது மக்களிடம் காட்டி விளம்பரப்படுத்திக்கொள்ளச்சற்றும் பின்வாங்குவது கிடையாது. அம்மாதிரி,செய்யும் காரியத்திலாவது ஏதாவது நாணயமிருக்கிறதா என்று பார்த்தால், அவர்களின் பித்தலாட்டம் விளங்காமல் போகாது.

சமீபத்தில் சென்னையிலுள்ள **பீச், போர்ட், பார்க்** என்றிருந்த மூன்று ரயில்வே ஸ்டேஷன்களின் பெயர்களை மாற்றி முறையே **கடற்கரை, கோட்டை, பூங்கா** என வைக்கப்பட்டிருப்பதாக விளம்பரப்படுத்தப்பட்டது. உண்மையிலேயே இவர்கள் ஸ்டேஷன் பெயர்களைக் கடற்கரை, கோட்டை, பூங்கா, என மாற்றியிருப்பார்களானால் ஆங்கிலத்திலும் Kadarkkarai, Kottai, Poonga, என்றுதானே போர்டுகளில் திருத்தி எழுதப்பட்டிருக்க வேண்டும்! அவ்வாறில்லாமல் ஆங்கிலத்தில் இன்றும் Beach, Fort, Park என்றே எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கும் போது இவர்கள் பெயர்களைத் தமிழாக்க வில்லை என்பதும், பெயர்கள் இன்னும் Beach, Fort, Park, என்றுதான் இருக்கின்றதென்பதும், பெயர்களை மொழி பெயர்க்கப்பட்டு மட்டும் இருக்கிறதென் பதும் யாருக்கும் விளங்காமல்போகாது. ஒருஇடத்தின்பெயரோ, நபரின் பெயரோ எந்தமொழியில் அழைக்கப் பட்டாலும், எழுதினாலும் பெரும்பாலும் சிற்சில உச்சரிப்பு வித்தியாசங்கள் உண்டாகுமே தவிர (அதுவும் அவரவர்கள் மொழி உச்சரிப்புக்கு ஏற்றாற் போல் மட்டும்தான்) மற்றபடி அந்தப் பெயரை மொழி பெயர்த்து வழங்குவது கிடையாது என்பதை எண்ணிப் பாருங்கள். உதாரணமாக, London என்று ஆங்கிலத்தில் இருந்தால் "லண்டன்" என்றுதானே தமிழிலும் கூறுகிறோம். ஜவஹர் என்று வடமொழியிலிருந்தால் அவரை "ஜவஹர்" என்றுதானே தமிழிலும் அழைக்கிறோம்.

அதுபோலவே தமிழில் புதுக்கோட்டை என்பதற்கு ஆங்கிலத்திலும் **Pudukkotai** என்றும், தேவகோட்டை என்றும் மற்றும் இதுபோலவே மற்ற ஊர்ப்பெயர்களும் எழுதப்பட்டும் அழைக்கப்பட்டும் வருகின்றனவே தவிர, புதுக்கோட்டை என்பதற்கு **New Fort** என்றோ, தேவகோட்டை என்பதற்கு **God Fort** என்றோ ஆங்கிலத்தில் எழுதப்படவில்லை யென்பதை எண்ணிப்பார்த்தால் நாம் கூறும் உண்மை நன்கு விளங்கும்.

ஆகவேதான், இப்பொழுது தமிழில் பெயர் மாற்றியிருப்பதாக மேற்சொன்ன பித்தலாட்டப் பிரசாரம் செய்வதை விடுத்து உண்மையிலேயே தமிழில் பெயர்கள் வைக்க விரும்புவார்களானால் ஆங்கிலத்திலும் அம்மாதிரியே அதாவது Kadarkkarai, kottai, Poonga என்றே எழுதப்பட வேண்டும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்!




---

## சட்டசபை சாப்பிட்டது!

சென்ற ஏப்ரல் மாதத்திலிருந்து டிசம்பர் 10உ வரை சென்னை அசெம்பிளி அங்கத்தினர்களுக்குப் பிரயாணப்படி முதலிய அலவன்ஸ்களில் சர்க்காருக்கு ரூ. 1,36,648 செலவாகி யிருக்கிறது. கௌன்சில் அங்கத்தினர்களுக்கு ரூ. 24,198 செலவாகி யிருக்கிறது. ஆக ரூ. 1,60,846 8½ மாதங்களுக்குச் செலவு. அங்கத்தினர்களின் சம்பளமும், மந்திரிகளின் சம்பளமும், மந்திரிமார்களின் பிரயாணப்படி அலவன்ஸ்களும் தனி.

ஆனால் இதற்கு, முன்பு ஒதுக்கப்பட்டிருந்த தொகையோ 1½ லட்சம். இப்போதே ஒரு லட்சத்து, அறுபத்தோராயிரம் ஆகிவிட்டதாம். இன்னும் 3½ மாதச் செலவுகள் வேறு பாக்கி யிருக்கிறதாம்.

---

உலகத்துக்கு அறிவு, அன்பு, தைரியமும் தேவை. பண்டைய காலத்திய பெருமையைப் பேசிக்கொள்வதாவது, அல்லது மூதாதைகளின் கால்வழி நடக்கவேண்டுமென்ற எண்ணமாவது தேவையில்லை. அஞ்சாத திருஷ்டியும், தாராள எண்ணமும் வேண்டும். மடிந்து, மக்கிப்போன இறந்த காலத்தைப்பற்றிய கவலையை ஒழித்து, நமது தாராள எண்ணத்தால் உண்டாகப்போகும் நிகழ்கால் செழுமையையே குறியாகக்கொள்ள வேண்டும்.

எண்ணித் துணிக! கருமம். துணிந்தபின்,
எண்ணுவம் என்பது இழுக்கு.
—திருவள்ளுவர்.

# குடி அரசு

.27—12—47 சனிக்கிழமை.

## முஸ்லிம்களைப்பற்றி காந்தியார் தீர்ப்பு.

★

முஸ்லிம்களிடம் காங்கரசுக்கு நம்பிக்கை இல்லை. முஸ்லிம்களைக் காங்கரஸ் இப்போது ஏற்காது. முஸ்லிம்கள் தங்களை யோக்கியமானவர்களாகவும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாவும், கருதும்படி நடந்து கொண்டு காங்கரஸ் எப்போது அழைக்குமோ என்று எதிர்பார்த்துத் தயாராய்க் காத்திருக்கவேண்டும். முஸ்லிம்களைக் காங்கரஸ் நம்பி அழைக்கிற போது முஸ்லிம்கள் காங்கரசில் சேரலாம். அதுவரை முஸ்லிம்களுக்குக் காங்கரசில் இடமில்லை'' என்பது ஆக நன்றாய் விளங்கும்படி காந்தியார் 22ம் தேதி டெல்லிப் பிரார்த்தனையின் போது வாக்குச் சொல்லி விட்டார்.

மற்றும் முஸ்லிம் லீகில் அரசியல் சம்பந்தமும் இருக்கக்கூடாது என்றும், லீக் மத சம்பந்தமான, சமுதாயச்சீர்திருத்தசம்பந்தமான நான் பொலிட்டிகல் (Non-political) கட்சியாக இருக்க வேண்டும் என்றும் லீகுக்கு நிபந்தனை அளித்து விட்டார்.

இவைகளிலிருந்து என்ன தெரிகிறது என்றால், இந்துஸ்தானத்தில் முஸ்லிம்கள் ஒரு அடிமைக் கூட்டமாக, கிட்டத்தட்ட நீண்டாத ஜாதியாக, இருக்க வேண்டும் என்றே காந்தியார் கருதி ஆக்கினை யிட்டு விட்டார் என்றே தெரிகிறது.

எப்படி எனில் ''முஸ்லிம்கள் இந்திய அரசியல் ஸ்தாபனமாகிய காங்கரசிலும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்''

''முஸ்லிம்கள் ஸ்தாபனமான முஸ்லிம் லீகிலும் அரசியல் சம்பந்தம் இருக்கக்கூடாது''

என்றால், இந்திய முஸ்லிம்களுக்கு இந்திய அரசியலில் பங்கு கொள்ள உரிமை இல்லை என்பதும், காங்கரஸ் சர்க்கார்பார்த்துத் தாங்களாக முஸ்லிம்களுக்கு என்ன செய்கிறார்களோ அதைப் பெற்றுத் திருப்தி அடைந்து வாழ வேண்டியது என்பதும்தான் இதன் பொருளாகும்.

ஜின்னா சாயபு அவர்கள் இந்திய முஸ்லிம் சமுதாயத்தின் ஏகத் தலைவராய் இருக்கும் போது ''எந்த முஸ்லிமும் லீக்கைத் தவிர வேறு கட்சியில் அங்கத்தினர்களாக இருக்கக்கூடாது'' என்று உத்தரவு போட்டிருந்தார். அது போலவே முஸ்லீம்களும் நடந்து கொண்டார்கள். ஜின்னா சாயபு அவர்கள் தலைமை, இந்துஸ்தான் முஸ்லிம்களுக்கு இருக்க முடியாமல் போனதும், காங்கரஸ் சர்வாதிகாரியான காந்தியார் எந்த முஸ்லிம்களையும் காங்கரஸ் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பது ஆக உத்தரவு போட்டு விட்டார்.

அதுமாத்திரமல்லாமல் இந்தஉத்தரவுக்குக் காரணம் காட்டுகையில், ''முஸ்லிம்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் அல்ல'', நம்பிக்கை ஏற்பட முஸ்லிம்கள் ''கண்ணியமானமுறையில் நடந்துசந்தேகத்திற்கிடமில்லாத மக்களாக நடந்து காட்டவேண்டும்'' என்றும் கூறி விட்டார்.

இப்படிக் கூறுவது சரிதானா? என்றுயாராவதுகாங்கரசுக்காரரை —சர்தார் பட்டேல் போன்றவர்களைக் கேட்டால், அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், ''இந்தப்படி சொல்லுவதோடு நிற்கிறோமே, ''24 மணி நேரத்தில் சொத்துப் பத்துகளை விட்டுவிட்டு, பெண்டுபிள்ளைகளுடன் இந்திய யூனியன் எல்லையை விட்டு வெளியேறுங்கள் என்று சொல்லாமல்இருக்கிறோமே, இது போதாதா உங்களுக்குக்காங்கரஸ் செய்த நன்றி'' என்று தைரியமாய்ச்சொல்லுகிறார்கள். இதற்குமுஸ்லிம்கள் என்ன சமாதானம் கூற முடியும்? போனது போகட்டும். இனிமேல் யோக்கியமாய் நடந்து கொள்ளுகிறோம்; 1947 டிசம்பர் முடிய நடந்ததை மறந்துவிடுங்கள் என்றுதானே கூறமுடியும்!

சிறிது நாட்களுக்குமுன்பு டாக்டர் சுப்பராயன் அவர்கள், போலீசில் முஸ்லிம்களுக்கு வேலை கொடுக்க முடியாதுஎன்றார். இது நியாயமா என்று கேட்டதற்கு பேசாதே! பேசினால் முன்பு கொடுத்திருப்பதையும் பிடுங்கிக் கொள்ளுவேன் என்று சொல்லி விட்டார். இப்படிப்பட்ட அகம்பாவ ஆணவம் தலைவிரித்தாடும் பேச்சுக்கள் எப்போது பேசப்படுகிறது என்றால், முஸ்லிம்கள் எப்போது காங்கரசுக்குத் தாங்களாக மண்டியிட ஆரம்பித்தார்களோ அந்த நிமிஷம் முதல்தான். முஸ்லிம்கள் பயந்து விட்டார்கள் என்பதைக்காங்கரஸ் நன்றாய் உணர்ந்துவிட்டது. இந்த நிலை ஏற்பட்டதற்குக் காரணம் முஸ்லிம்களில் பதவி வேட்டைக்காரரும், தனிச் சுயநலமே கண்ணானவர்களும், ஜின்னா சாயபு காலத்தில் ஆங்காங்குதலைவர்களாக இருக்க நேர்ந்ததாகும். யூனியன் பிரிந்த உடன் சமுதாயச் சுயமரியாதை நலனை விட்டொழித்துத் தங்கள் தங்கள் நலத்துக்குக் காங்கரசினிடம் பல்லைக் காட்ட ஆரம்பித்தவுடன் காங்கரசானது முஸ்லிம்தலைவர்கள் என்பவர்களுக்குச்சிறு பிச்சை போட்டு விட்டு, முஸ்லிம் பொது மக்களை ஏளனமாய், இழிவாய், அகம்பாவமாய்ப் பேசத் துணிந்து விட்டது; துணிந்து கொண்டே போகிறது. காந்தியார் பேச்சும், போக்கும் நாளுக்கு நாள் தடிப்பாகவும் கனத்த அடியாகவுமே இருந்து வருகிறது. இந்த நிலை முஸ்லிம்களுக்கு மிக்க பரிதாபகரமான தன்மை ஆகிவிட்டதுடன், முஸ்லிம்களது சமுதாயத்தைத் தங்கள் சமுதாயமாகக் கருதி மேல் விழுந்து உழைத்து வந்தவர்களுக்கும், முகத்தில் கரி பூசப்பட்ட காட்சிபோல் காணப்படுகிறது.

என்றாலும் இதற்குப் பரிகாரம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. என்னவென்றால் திராவிட சமுதாயத்தைப்போல் முஸ்லிம் சமுதாயம் 2 பிரிவாகப் பிரிந்துவிட வேண்டும். அதாவது அரசியல் உணர்ச்சியுள்ள படித்த, பணக்கார, சுந்தர்ப்பவாத முஸ்லிம்கள்,

அரசியலையே பிரதானமாய்க் கொண்டு தேசிய முஸ்லிம்களாக ஆகி, இப்போதையத் தேசிய முஸ்லிம்களை எப்படியாவது சரிப்படுத்திக்கொண்டு அவர்களோடு இரண்டறக் கலந்துவிடவேண்டும். இதில் ஆங்கிலம் படித்து வேலைக்கு எதிர்பார்ப்பவர்களும், வக்கீல்களும், பெரும் பணக்காரர்களும் சேர்ந்து விடவேண்டும். மீதிஉள்ள பொது பாமர முஸ்லிம்கள் திராவிடநாட்டுப் பிரிவினைக் கூட்டத்தாரோடு சேர்ந்துவிடவேண்டும்.

இப்படித்தான் முஸ்லிம் அல்லாத திராவிடர்கள் இருக்கிறார்கள். சிலர் காங்கரசிலும், சிலர் தங்களை ''ஜஸ்டிஸ்'' கட்சி என்று சொல்லிக்கொண்டு, பலர் திராவிடர் கழகத்திலும், திராவிடர் கழகத்தில் இல்லாவிட்டாலும் திராவிடநாட்டுப் பிரிவினைக் கூட்டத்தில் இருந்தும் வருகிறார்கள். இந்தக்கூட்டத்தினர்கள் அத்தனை பேரும் காங்கரஸ் விரோதிகள் அல்ல. காங்கரஸ் கொள்கையில் இருந்து மத்திய அரசாங்கச் சர்வாதிகாரத்தையும், மத்திய ஆட்சியில் திராவிடநாடு கலந்திருப்பதையும் மாத்திரம் ஆட்சேபிப்பவர்கள்.

திராவிடர் கழகத்தைப் போலவே, அதாவது பிரபுக்கள், பிரபுக்கள் போல் நடப்பவர்கள், சந்தர்ப்பவாதிகள் ஆகியவர்கள் இல்லாத ஸ்தாபனமாக, முஸ்லிம்களுக்கு உடனடியாக ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டாக வேண்டும். “இவர்களால், இந்த ஸ்தாபனத்தால்தான், முஸ்லிம் சமுதாயம் தற்காலம் விழுந்து கிடக்கும் பள்ளத்திலிருந்து மேடேற்றப்படும். மற்றபடிகாங்கரசை அணுக அணுகக் காங்கரஸ், குலம் கோத்திரம் விசாரித்துக்கொண்டு உச்சிக்குப்போய்க்கொண்டும்தான் இருக்கும். யாரோ இரண்டொரு பணக்காரருக்கும், பதவி வேட்டைக்காரருக்கும்ஆக, முஸ்லிம் சமுதாயமே காங்கரசுக்கு சரணாகதி ஆவது, மேலும் மேலும் தொல்லையைக் கொடுக்கும் என்பதே நமது கருத்து.

முஸ்லிம்களது மத சமுதாயத் தத்துவத்தில், காங்கரஸ்காரர்கள் ஏற்படுத்திக்கொண்டு இருக்கும் திட்டம், முஸ்லிம்கள் அனேகருக்குத் தெரியாது என்றே கருதுகிறோம். நா[illegible] போகப்போக ஒவ்வொன்றாக வெளிவந்துகொண்டு [illegible]

**நல்ல செய்தி!**

# சென்னை “விடுதலை”

★

★ ஜனவரி மாதம் முதல் “விடுதலை”யில் ஒரு வளர்ச்சி.

★ அசோஸியேடட், ராய்ட்டர் செய்திகளையும், கொண்டிலங்கும்.

★ பெரிய உருவம், அதாவது இப்போதைய உருவில் இரண்டு பங்கு.

## ஆனால்

★ விலையோ ஒரு இதழ் ஒரு அணாதான்.

கொடுமையாகக்காங்கரஸ்காரர்கள் மாத்திரமல்லாமல் காங்கரசிலில்லாத இந்துக்கள் என்பவர்களும் ஒன்று சேர்ந்து நெருக்குவார்கள். நெருக்கும்படியான நிலைக்கு வரவேண்டியவர்கள் ஆவார்கள். ஆதலால் பணக்காரத்தன்மையும் பதவி நோக்கமும் முக்கியமானதாய் இல்லாத முஸ்லிம் தோழர்கள், நன்றாய் முன்யோசனையோடு சிந்தித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய அவசிய அவசரச் சந்தர்ப்பம் இது என்பதை அறிவித்துக்கொள்ளுகிறோம்.

★

## வாசகர்களுக்கும்
### எழுத்தாளர்களுக்கும்

சென்ற 12 வருஷ காலமாகத் தமிழ் எழுத்து முறையில் நாம் கையாண்டுவரும்முறையை, முன்பு பரிகாசம் செய்து வந்தவர்களும் கூட, “நியாயம்” “இப்படித்தான் இருக்க வேண்டும்” “இதுதான் சிறு பிள்ளைகளுக்கு நன்றாகப் பதியும்”, “எளிதானமுறை” என்றெல்லாம் சொல்லும்படியான ஒரு நிலைமை நாட்டில் ஏற்பட்டு வந்திருக்கின்றது என்பதனை நம் வாசகர்களும், நமது இயக்கப் பத்திரிகைகள் புத்தகங்களின் ஆசிரியர்களும், மற்றவர்களும் உணருவார்கள்.

இந்தச் சீர்திருத்தமுறை இன்னும் வளரவேண்டும் என்பதாக அதாவது, தமிழ் எழுத்துகளின் வேறுபட்ட வடிவங்களையுடைய எண்ணிக்கை நூறுக்கு மேலாக [illegible] துகளுக்குள் அடக்கிவிடலாம் என்பதை விளக்கிக்காட்டி, இன்றையத் தமிழ் எழுத்துக்களில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் பல என்பதைப்பற்றிப் புலருக்கு அபிப்பிராயம் இருந்தாலும் எவரும் தைரியமாய் முன் வராமலே இருக்கின்றார்கள்; இவ்வளவு பெரிய காரியத்திற்குப் பாஷை ஞானம், இலக்கண ஞானம், பொதுக்கல்வி இல்லாத ஒரு சாதாரண மனிதன் முயற்சிக்கலாமா என்பது ஒரு பெரிய கேள்வியாக இருக்கலாம்; அது உண்மையாகவும் இருக்கலாம்; ஆனால் தகுந்த புலமையும் பாஷா ஞானமும், இலக்கண அறிவும் உள்ளவர்கள் எவரும் முயற்சிக்காவிட்டால் என் செய்வது? தவம் செய்வதா? அல்லது ஜபம் செய்வதா? என்று எடுத்துக்காட்டி, மற்ற மாற்றங்கள் நாளாவட்டத்தில் செய்யக்கூடியது என்று சொல்வதானாலும், ணா ணை முதலிய ஏழு எழுத்துகளைப் பொறுத்தவரையில் உள்ள மாற்றத்தை, இப்பொழுது செய்திருக்கின்றோம் என குடியரசு 1935ம் வருஷம் ஜனவரி மாதம் 20உ தலையங்கம் எழுதி, அந்த ஜனவரி மாதத்திலிருந்தே குடி அரசும், அதன் பின் வெளிப்படுத்திய குடி அரசு வெளியீடுகளும், விடுதலைப் பத்திரிகையும் அம்முறையையே மேற்கொண்டு வந்திருக்கின்றது என்பதனைத் தமிழ்நாடு நன்கு அறியும்.

அதே தலையங்கத்தில் உயிர் எழுத்தை [illegible]

எழுத்துகளும் தமிழ்ப் பாஷைக்கு அவசியமில்லை என்பதே நமது வெகு நாளைய அபிப்பிராயமாகுமெனவும், ஐகாரம் வேண்டிய எழுத்துகளுக்கு **ை**, என்ற அடையாளத்தைச் சேர்ப்பதற்குப் பதிலாக **ய்** என்ற எழுத்தைப் பின்னால் சேர்த்துக் கொண்டால் ஐகார சப்தம் தானாகவே வந்துவிடுகின்றது எனவும், உதாரணமாகக் **கை** என்பதற்குப்பதிலாகக் **கய்** என்று எழுதினால் சப்தம் மாறுவதில்லை என்பது விளங்கும் எனவும், அதுபோலவே ஔ காரத்துக்கும், **கௌ** என்பதற்குப் பதிலாகக் **கவ்** என்றோ **கவு** என்றோ எழுதினால் சப்தம் மாறுவதில்லை எனவும் **கௌமதி—கவ்மதி, கவுமதி** என்கின்ற சப்தங்கள் ஒன்று போலவே உச்சரிப்பதைக் காணலாம் எனவும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது.

தமிழ் எழுத்து வடிவங்களின் பல வேறுபட்ட எண்ணிக்கை, தமிழ் மொழியைக் கற்றுக்கொள்பவர்களுக்கும், விஞ்ஞான முதிர்ச்சியால் விளைந்த அச்சுத் தொழிலுக்கும், பெரிதும் சிரமத்தைக் கொடுப்பதாய், வீண் காலச் செலவை யுண்டுபண்ணுவதாய், பொருள் நஷ்டத்தையும் தருவதாய் இருக்கிறது என்பதை நாம் விளக்கிக் கூறிச் செயலில் மேற்கொண்டு வந்தும் கூட, தமிழ் நாட்டில் இதுவரையில் மற்றவர்களால் இந்த முறை மேற்கொள்ளப்படவில்லை என்றால், உண்மையில் இதற்கு என்ன நியாயம், சமாதானம் கூறமுடியும்? ஏதோ எதிர்க்கட்சிக்காரன் கூறுகின்றான் அதை நாம் மேற் கொள்ளலாமா என்கின்ற ஒரு போக்கைத் தவிர, அதாவது நீ சொல்வது என்ன? நான் கேட்பது என்ன? தொட்டுக் கொண்டு கூடச் சாப்பிடுவேன் என்கின்ற ஒரு போக்கைத் தவிர, வேறு நியாயமோ சமாதானமோ இல்லை என்று, மற்ற கட்சிப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் புத்தக ஆசிரியர்கள், வைதீகப் போக்குடைய பழமை விரும்பிகளான ஆசிரியர்கள் விஷயத்தில் ஒரு சமாதானமாகக் கருதிக்கொண்டாலும் கூட, நமது இயக்கத்தைச் சேர்ந்த பத்திரிகை ஆசிரியர்களும், புத்தக ஆசிரியர்களும் அவர்கள் போக்கிலேயே நடந்து வருவதற்கு உண்மையிலேயே நம்மால் நியாயமான

ஐ, ஔ, ஆகிய இரண்டு எழுத்துக்களையும் பொறுத்து, முன்பு எடுத்துக் காட்டிய அளவுக்கு இப்பொழுது ஒரேயடியாக உயிர் மெய் யெழுத்துக்களிலும் நாம் மாற்றம் செய்ய விரும்பவில்லை என்றாலும், ஐ என்பதை, அய் என்றும் ஔ என்பதை, அவ் என்றும் இதுவரை சிற்சில சந்தர்ப்பத்தில் எழுதிக் கொண்டு வந்திருக்கின்ற போக்கில், அடுத்த இதழிலிருந்து **அய்** என்றும் **அவ்** என்றுமே வழங்குவதென முடிவு கட்டியிருக்கின்றோம் என்பதையும், இதனால் ஐ என்ற 1 அறை (கேஸ்) குறைந்து போகின்றதென்பதையும், நம்வாசகர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஐ என்பது, எழுத்துக்களைப் பழகிக் கொள்ளுகிற சிறு குழந்தைகளுக்கு எவ்வளவு வருத்தத்தையுண்டு பண்ணி வந்திருக்கின்றதென்பதையும், ஐ என்ற எழுத்தை எழுதத் தெரியாமல் ஆரம்ப ஆசிரியர்கள் அடிக்கும் அடிக்குப் பயந்து எத்தனை சிறுவர்கள் பள்ளிக்கூடத்தையே விட்டு விட்டார்கள் என்பதையும், ஔ என்ற எழுத்தை **அவ்** என்று படிப்பதா? வௌ என்று படிப்பதா? எனத்தடுமாற வேண்டிய நிலையில் இருக்கின்றது என்பதையும் உணர்ந்தவர்கள் எவரும் இதை மறுக்க முடியாதெனவும் வற்புறுத்திச் சொல்ல ஆசைப் படுகின்றோம்.

இந்த நேரத்தில் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் புத்தக ஆசிரியர்கள், வெளியீட்டு நிலையத்தார் ஆகியோருக்கும் ஒரு வார்த்தை.

இந்த எழுத்து மாற்றங்கள் வேண்டியது தான் என்பதை உங்கள் அறிவு ஒப்புக் கொள்ளுமானால், வரப்போகும் ஜனவரி மாதத்திலிருந்தாவது இந்தமுறையைக் கையாளுங்கள்! இதனால் பணச் செலவும் காலச் செலவும் வீண் தொந்தரவும் ஏற்படுகிறது என்பதையும் உணருங்கள் என்று சொல்ல விரும்புவதோடு, நமது இயக்கத்தைச் சேர்ந்த பத்திரிகை ஆசிரியர்களும் புத்தக ஆசிரியர்களும் வெளியீட்டு நிலையத்தார்களும் இந்த முறையைப் பின்பற்றுவார்கள் எனவும் நம்புகின்றோம்.

## உண்மையா?

தில்லை நகர அகில இந்தியக் கதர்க்கடை வியாபாரி தோழர் பாலகிருஷ்ணப் பிள்ளை என்பவரிடம், சமையல் வேலை செய்து வந்த துரைசாமி என்பவரை, போலீஸ் 64-வது சட்டத்தின் கீழ் சார்ஜ் செய்து மாஜிஸ்திரேட் கோர்ட்டில் கேஸ் நடந்தது உண்மையா?

மேற்படி துரைசாமிக்கு சாதகமாக, சிதம்பரம் காங்கரஸ் கமிட்டி தலைவரும், கதர்க்கடை கோவிந்தசாமி என்பவரும் டிபன்ஸ் சாட்சியம் சொல்லியது உண்மையா?

இந்தத் துரைசாமி ஏற்கனவே இரண்டு தடவை குற்றவாளியாகி ஜெயிலுக்குப்போய் வந்தவர் என்பதுண்மையா?

தென்னார்க்காடு ஜில்லா காங்கரஸ் கமிட்டி செக்ரட்டரி சிவபுரி தோழர் கிருஷ்ணசாமி படையாட்சி என்பவரும், இன்னும் சில காங்கரஸ் தோழர்களும் சேர்ந்து, போலீஸ்காரரையும் மாஜிஸ்திரேட்டையும் வற்புறுத்தி, எப்படியும் விடுதலை செய்து விட வேண்டுமென்றும், செய்யாவிட்டால் மேலாவிலிருந்து வரும் தொந்தரவுகளுக்கு ஆளாக வேண்டுமென்றும் பயமுறுத்தி அவரை விடுதலை பெறச் செய்தது உண்மையா?

அதே 64-வது சட்டத்தில் சார்ஜ் செய்யப்பட்ட, கிருஷ்ணசாமி என்பவருக்கு மட்டும் (திராவிட கழகத் தோழர்) 6-வாரம் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது உண்மையா?

பிராமணனுக்கு ஒரு தண்டனை சூத்திரனுக்கு ஒரு தண்டனை என்று முன்னால் இருந்த மனுதர்மமே, இப்பொழுது காங்கரசாருக்கு ஒரு தண்டனை, காங்கரஸ் அல்லாதவர்களுக்கு ஒரு தண்டனையாக மாறியிருக்கிறதெனவும், மனுஆட்சி ஏட்டில் இருப்பது காங்கரஸ் ஆட்சி நாட்டில் நடப்பது எனவும், மக்கள்பேசிக்கொள்வதுண்மையா?

## மணமகள் தேவை.

23 வயதுள்ளவரும், எழுதப் படிக்கத் தெரிந்தவரும், மாதம் ரூ 60-வருமானமும் உள்ள கொங்கு வேளாள வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கு மணமகள் தேவை. விபரத்திற்கு எழுதவும்.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# நல்ல தீர்ப்பு!

சித்தூர் ஜில்லா கோர்ட்டில் 16-12-47ல் உருக்கமான காட்சி ஏற்பட்டது. புருஷனுக்கும் மனைவிக்குமிடையே பலமான தகராறு ஏற்பட்டு, அவர்கள் தமது கட்சிகளைக் கடுமையாக வாதிக்கும்பொருட்டு கோர்ட்டுக்கு வந்தனர். இறுதியில் தகராறு தீர்ந்து அவர்கள் ஒற்றுமையாகக் கைகோத்துக்கொண்டனர். விசாரணை ஆரம்பத்தில் அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதற்குக்கூட வெறுத்தனர். இறுதியில் அவர்கள் தகராறுகளையும் சச்சரவுகளையும் 'ஆழமாகக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு'' புன்முறுவலுடன் கைகோத்துக் கொண்டு கோர்ட்டிலிருந்து வெளியேறினார்களென்றால் ஆச்சரியமன்றோ?

கொண்டாரெட்டி என்பவருக்கும் அவருடைய மனைவி கங்குலம்மாவுக்குமிடையே மனஸ்தாபம் ஏற்பட்டு கோர்ட்டுக்குப்போக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. முதலில் ஜில்லா முனிசீப் கோர்ட்டில் விசாரணை நடைபெற்றது. மனைவி கங்குலம்மாவுக்கு கொண்டாரெட்டி ஜீவனாம்சம் கொடுக்கவேண்டுந்தான் என்று கீழ்க்கோர்ட் நீதிபதி உத்தரவிட்டார்.

கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பை ஆட்சேபித்து கொண்டாரெட்டி சித்தூர் ஜில்லா நீதிபதி கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

நீதிபதியின் யோசனைக்கிணங்க கொண்டாரெட்டியும் அவருடைய மனைவி கங்குலம்மாவும் தமது நண்பர்களுடனும் உறவினர்களுடனும் கோர்ட்டில் ஆஜராயிருந்தனர். கணவனும் மனைவியும் மிகவும் வைராக்கியத்துடன் ஒருவர் முகத்தை ஒருவர் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை.

இருதரப்பு வக்கீல்களும் தமது வாதத் திறமையைக் காட்டி அதி தீவிரமாக தமது கட்சிகளை வாதித்தனர். நீதிபதியின் ஆலோசனைக்கிணங்க கணவனும் மனைவியும் ஒத்துக்கொண்ட ஒரு சமரச உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டிற்கிணங்க அப்பீல் மனுதாரும் அவருடைய மனைவியும் மீண்டும் ஒரு வீட்டில் ஒன்று சேர்ந்து வசிக்கவேண்டும்.

கொண்டாரெட்டி தனது மனைவியைச் சேர்த்துக்கொள்ள இசைந்தார். ஆனால் மனைவியோ தன்னைத் தன்னுடைய கணவர் துன்புறுத்தியதாகவும், தனக்கு ஜீவனாம்சமே வேண்டும் என்றும் கூறினார்.

''மனைவி அருகில் சென்று நிபந்தனையின்றி மன்னிப்பு அளிக்குமாறு உரத்த குரலில் கேளுங்கள்'' என்று நீதிபதி அப்பீல் மனுதாராகிய கொண்டா ரெட்டிக்கு உத்தரவிட்டார்.

நீதிபதி கூறியபடி கொண்டா ரெட்டி ஒவ்வொரு வார்த்தையாக உரத்த குரலில் கூறினார்.

நீதிபதி கூறியதற்கிணங்க, கொண்டாரெட்டி தனது மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு அவளைக் காதலிப்பதாகவும், இனி துன்புறுத்தவில்லையென்றும் கூறினார்.

மனைவியின் மனம் உருகிவிட்டது. கோபம் போனவிடம் தெரியவில்லை! தன்னுடைய கணவரை மன்னித்துவிட்டதாக கூறினாள் மங்கை.

பிறகு கணவரான கொண்டா ரெட்டி தனது மாமனாருக்கு முன்பு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். அவருடைய மனைவி கங்குலம்மா தனதுகணவரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வயோதிகர் முன்பு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்.

பிறகு கொண்டாரெட்டியும் அவருடைய மனைவி கங்குலம்மாவும் கைகோத்துக் கொண்டு நீதிபதி முன்பு காட்சியளித்தனர்.

உடனே ஜில்லாகோர்ட் நீதிபதி கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பை ரத்துச் செய்தார். ஒன்று சேர்ந்து வசிக்குமாறு அவர் அப்பீல் மனுதாருக்கும் அவருடைய மனைவிக்கும் புத்தி கூறினார்.

மனஸ்தாபத்துடன் கோர்ட்டுக்கு வந்த தம்பதிகள் மனோரம்மியத்துடன் கைகோத்துக்கொண்டு கோர்ட்டிலிருந்து வெளியே இறங்கிச் சென்றனர்.

[5ம் பக்கத் தொடர்ச்சி]

காட்சியை முன்னதாக, எதாவது ஒரு இடத்தில் அமைத்திருக்கலாம்.

தோழர் N. S. K. சீர்திருத்த மணங் குறித்துப்பேசும்போது, ''ஆடம்பரச் செலவு கூடாது''..............என்று நம்ப ஊர் திராவிடத் தளபதி........ பிரசங்கம் பண்ணியும், பத்திரிகையிலேஎழுதியும் புத்தகத்திலேஎழுதியும் வருகிறாங்க'' என்ற தொடர்ச்சியின் ''திராவிடத் தளபதி'' க்குப்பின்னுள்ள வார்த்தைகள் மறைந்து விட்டன. சில ஊர்களில் எதிரிலிருப்பவர்'' அண்ணாவா?'' என்றுகேட்பதாகக் காட்டப்படுகிறது. சிலஊர்களில்''அண்ணாவா''என்ற வார்த்தையும் இல்லாமல் மொட்டையாக இருக்கிறது. இதற்குப் பொறுப்பாளர் யாராயிருப்பினும் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஆபாசப் புராணங்களையும் அரைநிர்வாணக் கோலங்களையும் அனுமதிக்கும் சென்ஸார் போர்டார் இம்மாதிரி சில இடங்களை அனுமதிக்க மறுத்தால் அவர்களது குறுகிய புத்தியும் துரோக சிந்தனையுமே வெளியாகிறது என்போம். நமக்கு அதைப்பற்றி கவலையில்லை. நாடு தீர்ப்புக் கூறட்டும்!

''பைத்தியக்காரன்'' படம் நாட்டுக்குத் தேவையான படம் என்பதை முழுமனதோடு கூறித் தமிழர்களுக்குச் சிபார்சு செய்கிறோம். இதற்கு நாம் காட்டும் ஆதரவின் மூலம் இனி இதுபோன்ற படங்களையே உற்பத்தியாளர்கள் எடுக்க வேண்டுமென்ற நிர்ப்பந்த நிலையை ஏற்படுத்துவோம். சினிமாக்கலையின் மூலம் புரட்சி விதையை நாட்டில் தூவிவரும் தோழர் என். எஸ். கே. அவர்களுக்கு த்திராவிடர்களின் நன்றி என்றென்றும் உரித்தாகுக.

எஸ். கருணானந்தம்.

[அடுத்தவாரம் 'ஒரே முத்தம்' என்ற நாடக விமர்சனத்தைஎதிர் பாருங்கள்.]

ஆ-ர்

---

முதன் முதலாக நமது நாட்டு இளைஞர்கள் உடற் கட்டுடையவர்களாய் இருத்தல் வேண்டும். மதம் அதன்பிறகுதானே வரும். எனது வாலிபத் தோழர்களே! வலிமையை அடையுங்கள்; இதுவே எனது புத்திமதி. கீதையைப் படிப்பதைக் காட்டிலும் பந்தாட்டத்தினால் கடவுளை எளிதில் காணலாம். உங்களுடைய வன்மையான தசைகளினால் கீதையை நன்றாய் அறிய முடியும்.

விவேகாநந்தர்.

மனித சக்தியையும், மனோவேகத்தையும் தடுத்து விலங்குகளால் பிணைக்க முயலுபவர்களையெல்லாம் நான் வெறுக்கிறேன். இவர்களில் மதமந்திரிகளையும், பெரும்பான்மையான பாடசாலை உபாத்தியாயர்களையும், 100-க்கு 90 நியாயாதிபதிகளையும், தங்கள் தங்கள் ஜாதியார்களில் சமூக கட்டுப்பாட்டை உண்டாக்கி மரியாதை பெற்றவர்களையும், சேர்க்கிறேன்.

பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்.

ஜனநாயக முற்போக்குக்கு இடையூறாயிருக்கின்ற எந்த ஸ்தாபனங்களும் தங்களைத் தாங்களே திருத்திக் கொள்ள முற்படவேண்டும். இல்லையேல் அவற்றை உடைத்துத் தகர்க்கப் பின் வாங்கலாகாது.

பெப்ரல் மாண்டு.

# புயல் ஓய்ந்தால்?

(இளம்பூரணன்)

## 1.

“புரட்சி ஓங்குக! புல்லர்கள் ஒழிக! குடியரசுக்கு ஜே! முடியரசு வீழ்க! புராணப் புரட்டர்கள் அழிக!.........”

“அமைச்சரே இதென்ன ஒரே இரைச்சல்—அமர்க்களம்! எங்கே இச் சப்தம்? இவர்கள் யார்? எனக்கு ஒன் றும் புரியவில்லையே!” என்றது மன் னன் மாயதர்மனின் குரல் பதறத் திற்கிடையே.

“குடி மக்கள் அரண்மனையின் தலைவாயிலில் வந்து நிற்கின்றார்கள். அரசரை உடனே பார்க்க வேண்டு மாம்!” என்று தலை தெரிக்க ஓடி வந்த மெய்க்காவலர்களில் ஒருவன் முழங்கினான்.

“எந்நிலை ஆபத்து; அமைச்சரே உதவும். என்ன மௌனம் சாதிக்கி றீர்?”

“மகாராஜ்! தாங்கள் அறியாதது ஒன்றுமில்லை. எனினும் இப்புரட்சி யின் காரணத்தை நாம் அறிவோம்.”

“விரைவில் கூறும்! நமக்கிடையில் இப்பொழுது இருக்கும் காலம் மிகக் குறுகியது என்பதை அறியீரோ!”

“எல்லாம் அந்தப் ‘புரட்டன்’ இளம் பரிதியால் தான்”

“உண்மை நானும் அவ்வாறுதான் கேள்விப்பட்டேன்”

“அவன் மேல் என்ன குற்றம் இருக்கிறது?” என்று குரல் கொடுத் தாள் அப்பொழுதுதான் அறையில் நுழைந்த அரசி.

“புரட்சி, புதுமை என்றெல்லாம் பொது மக்களிடையே ‘பித்தலாட்டப்’ பேச்சுகளை நடத்தி, அவர்களின் ‘பொன்னான’ மனங்களையும் சின்னா பின்னமாக்கி விட்டான். ஏன் செய்ய மாட்டான்? மன்னனின் மகள் இள வரசியின் துணையிருந்தால் இதுவும் செய்வான் இன்னமும் செய்வான்!” என்றார் ஆவேசம் மிகுந்த மந்திரி தன் பூணூலை இழுத்து விட்டுக்கொண்டே.

இதற்குள் கூக்குரல் அதிகரித்தது. “மன்னனை வெளியேற்றுக! புரட்சி வளர்க”

மன்னன் தன் சைனியத்திற்குச் சைகை காட்டினான். அவ்வளவுதான்! வெண்ணெய் திரண்டு வரும்பொழுது தாழி உடைந்தாற்போல் மக்கள் கூட் டம் உடைந்தது. மக்கட் தலைவன் இளம்பரிதியின் கைகளை இருப்புச் சங்கிலிகள் வளைத்து முத்தமிட்டன.

## 2.

“என்ன! என் இன்னுயிர்க் கண் ணாளனுக்குக் கடுங்காவலா! வறுமை யை வேரறுக்க வந்த வீரர் திலகத்து க்கு ஒரு சிறையா வீடு? நொந்து யாது பயன்! உம்......இதெல்லாம் ‘லோ கோபகாரி’ என்று தன்னைத்தானே பறையடித்துக் கொள்ளும், அந்த நன்றிகெட்ட நயவஞ்சகன்—மந்திரி யின்—செயல்.” இவ்வாறு பற்பல எண்ணி நெஞ்சம் குமுறா நின்றாள் இளவரசி முல்லை.

அரசன் வருகையை அறியவே சிந்த னைச் சுழல் பெருமூச்சுடன் கூடிய குமிழ் விட்டு மறைந்தது.

“முல்லை”

“அப்பா”

“இளம்பரிதிக்கு விளைந்த துயரத் தை அறிவாய் என நம்புகிறேன். இனி அவன் ஒழிந்தான்; இனியும் நீ அவனு டன் நட்புக்கொண்டு நாட்டு மக்களின் அமைதியைக் குலைத்தால் உன்னை நாடு கடத்தத் தீர்மானித்திருக்கி றோம்.”

“அப்பா, புராணம், சாஸ்திரம் முத லிய மதுவகைகளை மதம் என்னும் மதுக்கிண்ணத்தில் ஊற்றித்தர, நீங்கள் அதைப் பருகி விட்டு மயக்கப் போதை யில் இருக்கிறீர்கள். எனவே, அவன் உங்களுக்கும் மக்களுக்கும் இழைக்கும் எண்ணற்கரிய இன்னல்களைக் காண இயலாது கண்மூடிக்காலம் தள்ளுகின் றீர்கள்!”

“நீ ஒன்றும் அறியாதவள். அரசியல் விஷயமே தெரியாதவள்......” என்று கூறிய மாயதர்மன் நிற்கவில்லை.

முல்லையறிவாள். தான் என்ன தான் ‘சிபார்சு’ செய்தாலும், இளம்பரி தியை விடுதலை செய்யார் என்று. ஆகவே ஒன்றும் பேசாது இருந்து விட்டாள். “நள்ளிரவில் சிறை சென்று தன் காதலனை—புரட்சி வீர னைக் கண்டு பேசவேண்டும்” என்று தீர்மானித்தாள்.

## 3.

சிங்கபுரம் என்பதுதான் மாயதர்மன் ஆண்டுவரும் மலைநாட்டுக்குத் தலை நகர்—புரட்சிக் கவி நற்கருணையா ரின் உறைவிடம். ‘அரசவைப் புகழ்’ அடையாவிட்டாலும் பொது மக்களின் மனங்களாகிய பொன் ஏடுகளில் தன் பெயரைப் பதிவு செய்துகொண்டவர். இவரின் ஒன்று விட்ட புதல்வனே இளம்பரிதி. தந்தைக்கு இருந்த அறி வும், ஆற்றலும் மகனுக்கும் இருந்தது. அவன் ஓர் இளவல், அஞ்சா நெஞ்சி னன்—ஆண்மையின் முழுத்தோற்றம். கல்விக்கதிர். இதற்கெல்லாம் மேலாக அவன் கவின்பெறு வனப்புடையோன்.

பஞ்சு மெத்தையிலும், பட்டு மெத் தையிலும் படுத்து உருளும் ‘உல்லாசர்’ களையா இளவரசி நாடினாள். அவர் களிடை அழகிருந்தால் எழுத்துக் கூட்டி வாசிக்கக் கற்றுக்கொண்டிருப் பார்கள். சிறிது கல்வியுடையவர்க ளானால் பாட்டாளிகளின் துன்பக் கண்ணீரைப் பெருக்க வழிகளை அமைப்பவர்களாயிருப்பார்கள். இந் நிலையைக் கண்டு வெறுத்ததினால் தான் இளம்பரிதியின் உள்ளத்தில் அவள் இடம் பெற்றாள்.

இளம்பரிதி ஓர் சீர்திருத்தவாதி. அடிக்கடி மக்களிடை சொற்போர் நிகழ்த்துவான். கார்த்திகை மாதம் நெருங்கினால்,

“பாலைக்கண்டே அறியாத அந்தப் பச்சிளங் குழந்தை, பசியால் வீட்டில் ‘வீர் வீர்’ என்று அழ, பசியே எடுக்காத அந்தக் “கற்பிடிப்பு”க்களுக்கு—‘குமரக் கடவுள்’களுக்கு—பாலினால் ‘அபிஷேகம்’ செய்வதேனோ? என் றும், அவ்வூர் அரசியல் தேர்தல் காலங் களில்,

“‘குள்ளநரி’க் கூட்டங்களுக்கும், ‘சிறிய திருவடி’ (அனுமான்)யின் சந் ததிகளுக்கும் ‘வோட்’ அளித்து உங் கள் வயிற்றில் நீங்களாகவே மண்ணை யடித்துக்கொள்ளாதீர்கள்” என்றும் பன்முறை அவர்களுக்கு இடித்துக் கூறுவான்,

அப்படி ‘இடி இடி’யென முழங்கிய சிங்கம் இப்பொழுது சிறைக்கூண்டில்! ஆம், சமூகத்தின் நன்மைக்கும் தேவை க்கும் சளைக்காது மாடுபோல் உழை த்து, உடல்தேய்ந்த பாட்டாளிகளின் மேலேயே—பாமரர்களின் மேலேயே பாரங்களை ஏற்றிவைத்த—ஏற்றி வைத்திருக்கும் நன்றிகெட்ட சமூகத் திற்கு நல்லதொரு சவுக்கடி கொடுத்த இளம்பரிதிக்கு இருட்டறைவாசம்.

மன்னன் என்ன செய்வான். அவன் தான் மந்திரியின் முன் ‘பெட்டிப் பாம்பாகி’ விடுவானே! மந்திரி ‘பூதே வர்’ என்று தங்களைத்தாங்களே சொல் லிக்கொள்ளும் ஆரியக்கூட்டத்தினரில் ஒருவன். உழவரின் வரியை இரட் டித்தான். உழவுத்தொழில் உருக் குலைந்தது. நாட்டில் பஞ்சம் எங்கும் தாண்டவமாடியது. பலவந்த மாக உழவர்களை வேலைவாங்கினான். உழாதவர்களுக்குச் சவுக்குதான் பதில் சொல்லும். இப்படியாக ‘ரஷ்ய ஜார்’ ஆட்சி செய்து பார்த்தான்; பலிக்க வில்லை.

பொதுமக்களின் மனதில் புரட்சி கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. இளம்பரிதி அதற்குத் தூபமிட்டான். பற்றிக்கொண்டது பலமாக.

## 4.

நள்ளிரவு. சிறைக்கூடத்தைச் சுற்றி எங்கும் ஒரே மை யிருட்டு. கூடத்தின் ஒரு மூலையில் ‘மினுக்’ ‘மினுக்’ என்று ஒரு விளக்கு. அருகில் உட்கார்ந்து, இளம்பரிதி, மந்திரி வீசிய வஞ்சக வலையில் வழுக்கி விழுந்த அரசனைப்போல், விளக் கொளியைக் கண்டு மயங்கி அதன்மேல் விழுந்து மடியும் சிறு பூச்சிகளைப் பார்த்துக்கொண்டு இருந்தான்.

திடீரென்று வெளியில் காலடி ஓசை கேட்கவே திரும்பினான். வியப்பும் வேதனையும் அவனை ஒருங்கே கட்டிக்கொண்டன, வாயடைத்து நின்றுவிட்டான். வந்து நின்ற முல்லை தான், தன்னை தைரியப்படுத்திக் கொண்டு மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தாள்.

"ஏன் பயப்படுகிறீர்கள்? நான் வந்தது குற்றமா?"

"இல்லை இல்......நீ இங்கு எப்படி வர முடிந்தது என்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது"

"என்னைக் கண்டவுடன் காவலர்கள் விட்டுவிலகி நின்றார்கள்"

"கண்ணே! உன் கலங்கிய முகத்திலும் களங்க மற்ற காதல் கனிகின்றது. எழில் முத்தைப்........"

"அன்பரே! என்னைப்பற்றிக் காவியம் பாட இதுவோ நேரம்? நாம் தொடக்கிய வினையைக் கடிதில் முடிக்கவேண்டுமே"

"ஆம் முல்லை. அதுவும் நியாயம் தான். இதென்ன உடையைக்......!"

"உஸ்........சப்தம்!" என்றவாறே முல்லை தன் மேலாடையைக் கழற்றினாள். அவள் கட்டளைப்படியே இளம்பரிதியும் தன் மேலங்கிகளைக் களைந்து அவளிடம் கொடுத்தான். சற்று நேரத்தில் முல்லை இளம்பரிதியாகவும் இளம்பரிதி முல்லையாகவும் காட்சியளித்தார்கள்.

"காதலா, நான் இச்சிறையிலேயே தங்குகிறேன். நீங்கள் இன்று இரவோடு இரவே தன்மான வீரர்களைத் திரட்டி, காலையில் சிங்கபுரம் கோட்டையை முற்றுகையிடும் நற்பணியில் இறங்கவேண்டும்"

"மேலும் ஒன்று கூறுகின்றேன். நான் இங்கு வருங்கால் முக்காடிட்டு வந்ததால் நீரும் அவ்வாறே செல்ல வேண்டும்"

முல்லையினிடம் முத்தம் பெற்றவுடன் இளம்பரிதி அம் மங்கிய வெளிச்சத்தில் பாய்ந்து சென்று மறைந்தான்.

**5.**

காலை இன்னும் நன்றாக மலரவில்லை. கடல் அலைகளைப்போல் படைவீரர்கள் அணிஅணியாக ஒன்றன்பின் ஒன்றாகச் சென்றுகொண்டிருந்தனர். சற்று நேரத்திற்கெல்லாம் அப்படைகள் ஒரே காலத்தில் ஓரிடத்தில் கூடின. இளம்பரிதி தலைமை பூண்டான். படை கோட்டைவாசலை நோக்கியது. இதற்குள் அரசனின் படை கோட்டையைவிட்டு அகன்று எதிர்த்து நின்றது.

கருமுகில்களோடு முகில்கள் மோதினாலென்ன வீரர்களின் முழக்கம் வானை விண்டது. அம்பு, வாள், வேல், ஈட்டி முதலியவை வீரர்களின் செந்நீர் குடித்தன. மன்னனின் படை புறமுதுகு காட்டி ஓடியது. ஆம்! மாயதர்மன் தான் பணிந்தான், வெற்றிகொண்ட இளம்பரிதி சிறைக்குச் சென்றான். முல்லைக் கொடியாளிடம் இனிப்பு முத்தம் பெறலாம் என்றுதான் போனான். முல்லைக் கொடி தன்னைப்பற்றி அணைத்துக் கொள்ளும் என்று எண்ணினான். ஆனால் சிறையில் அவன் கண்டது யாரை. ஆம் முல்லையைத்தான் கண்டான், ஆனால் உயிரையிழந்த உடல் அது! இளம்பரிதி நடந்ததை உய்த்துணர்ந்தான். இளம்பரிதியின் உடையில் இருந்த முல்லை, வஞ்சமே உருவெடுத்த மந்திரியின் கண்களுக்கு இளம்பரிதியாகவே தோன்றினாள். சண்டாளன் தன் வாளுக்கு இரையாக்கினான் அவளை.

இளம்பரிதியின் உள்ளம் கடுகளவாகக்குறுகி விரிந்தது. ஆனால் பிதற்றினான் இல்லை. மனக் கடல் கொந்தளித்தது. சிந்தனைப் புயல்கள் வீறு கொண்டு வீசின. அந்தோ! அந்த மந்திரியின் வாழ்நாளுக்கு ஒரு முற்றுப் புள்ளி. இளம்பரிதியின் உடை வாள், குறுமதியினனாகிய மந்திரியின் உடலத்தில் ஊடுருவியது.

'ஏமாற்று வித்தை' என்னும் கபட நாடகத்திற்கு இறுதிப்படலம் பாடி முடிந்தது. மனித அட்டைகளின் நெற்றியில் ஒரு 'பட்டை நாமம்' என்றுதான் இளம்பரிதி நினைத்திருப்பான்.

புயலுக்குப்பின் அமைதியைக் கண்டார்கள் அந்நாட்டு மக்கள். புரட்சிக்குப்பின் புது வாழ்வு, புதுக்குடி—மக்கள் அரசு. எங்கும் இன்ப வெள்ளம்! மக்கட்தலைவன் இளம்பரிதிக்குப்புகழ் மாலை!

"வாழ்க குடியரசு! நிலவுக இன்பம்!"

---

## வரப்பெற்றோம்.

[குறிப்பு:- ஒவ்வொரு பிரதியே அனுப்பப்பட்டது]

### முன்னணி.

(வார விதழ்)
ஆசிரியர்: கே. எஸ். நாதன்.
தனி இதழ் 15 காசு.
ஆண்டுக்கு 6 வெள்ளி.
85. ஹைஸ்திரீட், கோலாலம்பூர்.

### வள்ளுவர்.

(மாத வெளியீடு)
ஆசிரியர்: கெ. விஸ்வலிங்க நாயனார்.
அம்மையப்ப முதலி தெரு,
சென்னை. 21.

### வாழ்க திராவிடம்.

(ஒரு ஆராய்ச்சி நூல்)
ஆசிரியர்: க. அன்பழகன், எம். ஏ.
விலை அணா 4.
திராவிடன் பதிப்பகம்
P. B. No. 18 வேலூர் வ. ஆ.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

**மைத்திரி:-** இவ்வளவு தானா! உனக்கு ஒன்றுமே தெரியாது போலிருக்கிறது. அங்கு பாரடி! என்ன என்ன கொள்ளை போகிறது! இனிமேல் அவளுக்கு என்னடி குறை?

**மந்தரை:-** என்னடி விசேஷம்! நீ சொல்வது எனக்கு ஒன்றுமே தெரியவில்லை.

**மைத்திரி:-** என்னடி இப்படிப் பேசுகிறாய்? நாளைக்கு இளைய மகாராஜாவுக்கு முடி சூட்டு நடக்கிறதடி. ஊரெல்லாம் எவ்வளவு அலங்காரமாய் இருக்கிறது! ஊருக்குள் எவ்வளவு ஆடம்பரங்கள் நடக்கின்றன! உன் வீடு உன் வீதி மாத்திரம் என்னடி ஒன்றும் மாற்றம் இல்லாமல் இப்படிப் பாழடைந்ததைப் போல் இருக்கிறதே! பரதனுக்கும் அவன் தாதாவுக்கும் அழைப்பனுப்பவில்லையாம்! ஏன் என்றால் காரியம் நாளையே நடக்க வேண்டுமாம்! நாள் இல்லையாம்! மற்றதெல்லாம் நடந்ததடி!

**மந்தரை:** இளைய மகாராஜா என்றால் நம்ம பரதன் தானே?

**மைத்திரி:-** போடி பைத்தியக்காரி! இளைய மகாராஜா இராமனடீ. அவருக்குத்தாண்டி நாளைக்கு முடி சூட்டு. உனக்கொன்றும் தெரியவில்லையே.

**மந்தரை:-** (திடுக்கிட்டவளாய்) நிஜமாகவா?

**மைத்திரி:-** ஆமாடி ஆமாம்! ஊரை எட்டிப் பாரடி! என்ன அலங்காரம் பாரு! எங்க ராணி வீடு இன்று பண்டிகைதான். ஒரே அமர்க்களம் தான்!

**மந்தரை:-** (எட்டிப் பார்த்து வயிற்றைப் பிசைந்து கொண்டு) சரி! நீ போய் வா! எனக்கு வேலை இருக்கிறது.

**மைத்திரி:-** சரி! நான் போகிறேனம்மா! எனக்கு எவ்வளவோ வேலை இருக்கிறது. உன் வீதியும் வீடும் எப்படியிருக்கிறதென்று பார்த்துப் போக வந்தேன். நாளைக்கு முடி சூட்டுக்கு வேண்டிய அலங்காரமெல்லாம் செய்து வை. நீயும் நன்றாய் அலங்கரித்துக் கொண்டு ஜோராய் ஜில்லென்றிரு. அங்கு அள்ளிக் கொடுக்கின்றார்கள். உங்களுக்கு மாத்திரம் இப்படித் தரித்திரக் கோலமா? என்று சொல்லிப் போய் விடுகிறாள்.

(காட்சி முடிகிறது)

# இரு வேறு சேரிகளில்.

(சு. திராவிடமணி)

ஊர்க்கடைசி. குப்பை கூளங்கள், சாக்கடை நீர்கொட்டும் இடம். அவ்விடத்தே அமைந்திருக்கின்றன சிற்சில கூரைக் குடிசைகள். பிறவியினால் தாழ்த்தப்பட்ட மக்கள்—வறுமையை இணைபிரியாத் தோழனாகக் கொண்ட மக்கள்—நாகரீக முன்னேற்றமில்லாத மக்கள் அவற்றில் வாழ்கின்றனர்.

ஊரின் நாயகம், மாந்தர்கள் மகிழ்வுடன் உலாவும் வீதி. இங்கே சிறந்த கட்டிடங்களில் நாகரிக மக்கள் வாழுகின்றனர். பிறர் உழைப்பால் வாழுபவர்கள். ஊரை எய்த்துப் பிழைக்கும் எத்தர்கள்—சாதி ஆணவம் தலைக்கேறிய மமதையாளர்கள்.

வெளித் தோற்றத்திலே இரண்டு காட்சிகளும் ஒரே பொருளுடையன. இரண்டும் சேரிகள்தான். ஆனால் தன்மையில் வேறு பாடுடையன. இரண்டிலும் மக்கள்தான் வாழ்கின்றனர். ஆனால் அங்கே வாழுபவர்கள் மக்களல்ல—மாக்கள். இங்கே வாழுபவர் மட்டும் பூசுரர், பிறப்பால் உயர்ந்தோர். மாக்களாக வாழும் மக்களின் உழைப்பால் வாழும் எத்தர்கள். முதல் போடாத பிறவி முதலாளிகள்.

பொழுது புலர்கின்றது. அங்குள்ள குடிசை வாசி எண்ணுகின்றான் ஏக்கத்துடன், "இன்று எங்குவேலைக்குச் சென்றால் கூலி கிடைக்கும்" என்று. இங்குள்ள வாசி எண்ணுகின்றான் எங்கே சென்றால் தீர்த்தமாட வசதியிருக்கும்; எங்கே சென்றால் புரோகிதம் பார்க்கலாம் என்று. அங்கேயுள்ள சிறுகுழந்தைகள் பசிக் கொடுமையால் கஞ்சியை எண்ணிக் கதறுகின்றன. இங்கேயுள்ள குழந்தைகள் தந்தைமார்களுடன் சிரித்துச் செல்கின்றன. அங்கேயுள்ள மடந்தை மட்குடத்தைக் கையிலேந்தி நீர் இறைக்கச் செல்கிறாள், இங்கேயுள்ள நங்கை பித்தளைக் குடம் கையிலேந்திச் செல்கிறாள் தண்ணீர் பிடித்து வருவதற்கு.

உச்சி வேளையில் கூரைவாசி உழைக்கின்றான் வெப்பத்தைப்பொருட்படுத்தாமல். வேலை முடித்து மரத்தடியிலமர்ந்து மட்கலயத்திலுள்ள கஞ்சியை ஆர்வத்தோடு அருந்துகின்றான். மறுபடியும் வேலைசெய்யத்தொடங்குகின்றான் மாலை வரையில். இங்கேயுள்ள காரைவாசி என்ன செய்கிறான் உழைப்பாளி உழைக்கும் உச்சிவேளையில்? பச்சரிசிச் சாப்பாட்டைப் பருப்பு நெய்யுடன் கலந்து உண்டு விட்டு ஏப்பம் விடுகிறான்! பின் வயிற்றைத் தடவிய வண்ணம் சாய்கிறான். தூக்கத்தில் ஆழ்கிறான்.

பறவைகள் தம் கூடுகளுக்குச் செல்லும் நேரம். புழுதி படிந்த உடலுடன், கந்தைத் துணியுடன், களைப்புடன் வீடு நோக்குகின்றான். அந்த நேரத்தில் உழைப்பு என்பதை இன்னதென அறிய விரும்பாத அக்கிரகார வாசி உல்லாசத்துடன் நடந்து செல்லுகிறான் காற்றுப் பிடிப்பதற்கு. காட்டுக்குக் களையெடுக்கச் சென்ற காரிகை அற்பக் கூலியுடன் திரும்புகிறாள் வீட்டுக்கு. இங்கே அற்புதமாகப் பூ முடிந்து காட்சியளிக்கிறாள் சேரி நங்கை!

இரவில் கூரைவாசி தனது உழைப்பின் பலனைக் கணக்கிடுகின்றான். அவனுடைய வருமானத்தைவிட முதலாளியிடம் பெற்ற ஏசல்களும், உதைகளும் அதிகமிருக்கக் காண்கிறான். நாளெல்லாம் உழைத்த பலன் குடும்பத்துக்கு அரை வயிற்றுக் கஞ்சிக்கும் காணாததை எண்ணி ஏக்கமுறுகின்றான். காரைவாசி என்ன செய்கிறான் இரவிலே? நாளெல்லாம் தான்செய்த புரோகித வருமானம், பிறரை எய்த்துப் பிடுங்கின பணம், இவற்றைக் கணக்கிடுகிறான். அது அவனது குடும்பத்தேவைக்கு அதிகமாக இருப்பதை உணர்ந்து "உல்லாசமாக" இருக்கிறான். கூரை வாசி தூங்கும்போது எண்ணற்ற கடவுள்களை வேண்டிக் கொள்கிறான் நாளைக்குக் கூலி அதிகம் கிடைக்க வேண்டுமென்று. வறுமைக்கடலினின்றும் என்று நீந்துவோம் என்ற ஏக்கத்துடன் அவன் துயிலுற ஆரம்பிக்கிறான். காரைவாசி நாளையத் தினம் வருமானம் பெறும் திட்டங்களை எதிர்பார்த்துப் பூரிப்புடன் துயிலுகிறான்.

மேற்கூறப்பட்ட காட்சி முன் இருந்தது. இப்பொழுதும் இருந்து கொண்டு வருகிறது. நாம் தினமும் இரண்டு சேரிகளின் வழியாகவும் நடமாடினால் மேற்கூறப்பட்ட காட்சிகளைக் காணலாம்.

மேற்கூறப்பட்டஏற்றத்தாழ்வுடைய காட்சிகள் தோன்றிய காரணமென்ன? இப்போதும் அந்த ஏற்றத் தாழ்வுகள் இருந்து கொண்டு வருவதின் காரணம் என்ன? இவற்றிற்குப் பதில் வெள்ளிடைமலை போல காணக் கிடைக்கிறது. மதம், கடவுள், சாத்திரம் என்பனவற்றை ஆராய்ந்து பார்த்தால், ஏற்றத் தாழ்வின் காரணம் மதம், கடவுள், சாத்திரம் என்று சொல்லப்படுவனவற்றின் பித்தலாட்டங்கள்தான்.

மதம், கடவுள், சாத்திரம் என்பவைகள் சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட பார்ப்பன இனம் மட்டும் முன்னேறுவதற்கும், உயர்ந்த இனமாவதற்கு ஏணி போன்றும், பழங்குடி மக்கள் முன்னேற வொட்டாமல் தடை செய்யும் மயிர்ப்பாலம் போன்றும் வேலை செய்கின்றன. "மக்களிலே நால் வருணம் கடவுளாலேயே ஏற்படுத்தப்பட்டது. இன்னின்ன குற்றங்களுக்கு இன்னின்ன தண்டனைகள் கிடைக்கும். அக்குற்றங்களுக்குப் பரிகாரமாக இன்னின்ன கருமங்கள் செய்தால் குற்றங்கள் நீங்கிவிடும். மோட்சம் கிட்டும்" என்று மக்களுக்கு மதம் கற்பிக்கிறது. இதன் பயனாக ஓர் ஏழை மகன், தன் வாழ்வை நடத்த முடியாதவன், இன்பமாக வாழ வழி ஏற்படுவதில்லை. அவ்வேழை மகன் அரை வயிற்றுக் கஞ்சியுடன் எதிர்காலத்திற்குச் சிறிது பணம் சேகரித்து வைத்திருந்தால் மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால், சாத்திரத்தின் பெயரால், திருவிழாக்களில் கலந்து கொண்டு பணத்தைச் செலவு செய்யும்படி செய்துவிடுகிறது மதம் எனும் அபின்.

தன் குடும்பத்தார்களுக்கு உடை இல்லாதிருந்தும்கூட, கடவுள்களுக்குப்பட்டுப் பீதாம்பரங்கள் வாங்கி அணிவிக்கத் தவறுவதில்லை அந்த ஏழை. தன் பெண்டுகளுக்கு நகையில்லாவிட்டாலும் கூட, கடவுள்களுக்கு நகை அணிவிக்கத் தவறுவதில்லை அந்த ஏழை. தன் பிள்ளைகளுக்குக் கொடுக்கக் காசு இல்லா விட்டாலும், பார்ப்பனப் பூசாரிக்குக் காசு (தட்சிணை) கொடுக்க அவன் தவறுவதில்லை. எப்போதோ இறந்து போன தன் மூதாதையர்களுக்கு, மறு உலகத்தில் இன்பம் உண்டாவதற்குப் பார்ப்பானைக் கொண்டு திதி, திவசம் கொடுக்கத் தவறுவதில்லை அந்த ஏழை மகன். அவன் தன் வாழ்நாளில் நடத்தும் திருமணங்கள், சடங்குகள், கருமாதிகள் உள்பட எல்லாச் சாத்திரமான காரியங்களுக்கும் பார்ப்பனப் புரோகிதனுக்கு வரிப்பணம் (தட்சிணை) கொடுக்கத் தவறுவதில்லை. அந்த ஏழை தான் பிறந்தது முதல் இறக்கும் வரையில் மதம், கடவுள், சாத்திரம் என்பவைகளால் கொடுக்கும் பணம் ஓர் இனத்தை மட்டும் முன்னேற்றச் செய்கிறது, தன்னினத்தை அடிமையாக்குகிறது, ஏழையாக்குகிறது என்பதை இன்றாவது உணர்கின்றானா? ஏன் உணரவில்லை பகுத்தறிவு வளரும் இந்தக் காலத்திலே கூட? மதம், கடவுள், சாத்திரம் என்பவைகளால் கட்டுண்டு கிடப்பதினால் அல்லவா அவன் எண்ணிப்பார்க்க நேரமில்லாதவனாக இருக்கிறான்?

அப்படி அவன் எண்ணிப்பார்க்க வேண்டுமானால் அவனுக்குப் பகுத்தறிவு ஊட்டும் கல்வி அவசியம். கல்வி பயின்றும் அவன்

"வறியோர்க்கெல்லாம் கல்வியின்
வாடை, வரவிடவில்லை மதக்
குருக்களின் மேடை, நறுக்கத்
தொலைந்தது அந்தப் பீடை,

ரோஜா முத்தையா

நாடெல்லாம் பாய்ந்தது கல்வி
நீரோடை''

என்ற புரட்சிக்கவியின் கருத்தை உணர்ந்தவனாகாவிட்டால் அவனுடைய கல்வியின் பயன் என்ன? இந்த நிலையிலன்றோ படித்த திருக்கூட்டத்தினர் பலர் இன்றும் இருக்கிறார்கள்! இத்தகைய படித்த கூட்டத்தினர் வறியோர்க்கெல்லாம் கல்வியின் வாடை வரவிடாத மதக் குருக்களின் மேடையைத் தகர்த்தெறிய முன்வந்தாலன்றோ ஏழைகள் பகுத்தறிவு பெற இயலும். ஆனால் படித்த திருக்கூட்டத்தினர் என்ன செய்கிறார்கள்?

பள்ளியில் விஞ்ஞானமும், தமிழும் போதிக்கும் ஆசிரியர் இருவர். ஒருவர் விஞ்ஞான வகுப்பில் பூமி உருண்டை, சுற்றிக்கொண்டேயிருக்கிறது, என்று போதிக்கிறார் பிள்ளைகளுக்கு. மற்றொரு ஆசான் தமிழ் வகுப்பில் ஒரு கதைப் பாடத்தில் பூமியை ஓர் அசுரன் பாயாகச் சுருட்டிக் கடலுள் மறைந்தான். அதைக் கண்ணபிரான் பன்றியுருவெடுத்துத் தனது கொம்பினால் குத்தியெடுத்தார் என்று போதிக்கிறார். ஓர் ஆசிரியர், பூமி உருண்டை, பூமி சூரியனைச் சுற்றி வருகையில் சந்திர சூரிய கிரணங்கள் உண்டாகின்றன என்று போதிக்கிறார். அதே ஆசான் கிரண தினத்தன்று தர்ப்பையும் கையுமாக ஆற்றங்கரைக்கு ஓடுகிறார் பூசை செய்வதற்கு! ஓர் ஆசிரியர் பூமியின் நிழல் சூரியனைச் சுற்றி வருகையில் சந்திர சூரிய கிரணங்கள் உண்டாகின்றன என்று போதிக்கிறார். அவரே மற்றோர் வகுப்பில் சூரியனை ராகு என்ற பாம்பு கவ்வுகிறது அதனால் சூரிய கிரணம் ஏற்படுகிறது என்கிறார்! மேற்படிப்பு படித்த ஆசான்களே! இந்த மாதிரி மதத்தினால் கட்டுப்பட்டிருக்கும் போது கூரைவாசிகளாகிய ஏழைகளை மதம் கட்டுப்படுத்தியது ஆச்சரியமல்ல. அதன் பயனாகவே அவர்கள் வாழ்க்கையில் முன்னேறாமல் அறியாமைக் கடலிலே ஆழ்ந்திருப்பதிலும் ஆச்சரியமில்லை.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'' என்று மதம் போதிக்கிறது. ஆனால் கடவுளை எந்த நேரமும் நினைத்துக் கொண்டிருக்கும் கூரை வாசிகள் கடவுளால் கைவிடப்பட்டிருக்கின்றனர். கடவுளின் கருணையை வேண்டி அவர்கள் கோயில்கள், குளங்கள் கட்டுகிறார்கள். விதவிதமான ஆபரணங்களை அணிவிக்கிறார்கள். அறுசுவை உண்டி (கடவுள் சாப்பிடா விட்டாலும்) படைக்கிறார்கள். கடவுள்களுக்கு வேண்டிய வசதிகள் அனைத்தையும் செய்கிறார்கள். இவ்வாறு மாடென உழைக்கும்கூட, கூரைவாசிகள் பல்லாண்டு காலமாக வறுமையிலேயேதான் உழலுகிறார்கள். ஆனால் கடவுளுக்கென்று ஓர் சிறிதும் உழைக்காத, ஏழைகளின் உழைப்பை உறிஞ்சுகிற, மோட்ச நரகத்தைக் காட்டி வயிறு வளர்க்கும் ஓர் பார்ப்பனக் கூட்டம் மட்டும் பல்லாண்டு காலமாக உல்லாச வாழ்வை நடத்தி வருகிறது. இதுதான் கடவுளின் காப்பாற்றும் குணமா? உண்மையாகவே கடவுள், தம்மை நம்பினோரைக் கைவிடாதவறாக இருந்தால் ஏழைகளின் துயர் என்றோ துடைக்கப்பட்டும், பார்ப்பனக் கூட்டத்தின் மமதையும் என்றோ அடக்கப் பட்டும் இருக்கும். ஆனால் இப்படி ஏற்பட்டிருக்கின்றதா? அருமை ஆத்திகத்தோழர்களே! கூரைவாசிகள் வணங்கும் கடவுள்களனைவரும் ஆரியர்களாக இருப்பதினாலன்றோ ஆரியப் பார்ப்பனீயம் உயர்த்தப் பட்டும், உழைப்பாளர்கள் உதாசீனம் செய்யப் பட்டும் வருகின்றனர். தமிழ்த்தெரியாத இந்த ஆரியக் கடவுளை வணங்குவதினாலன்றோ தமிழனின் துயர் துடைக்கப் படுவதில்லை! மாறாக ஆரியத்திற்கு அபயம் கொடுக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட ஓரவஞ்சகமுடைய ஆரியக் கடவுளை, என்று உழைப்பாளர்கள் நீதி மன்றத்தில் நிறுத்தி தண்டிக்கின்றார்களோ அன்றுதான் அவர்களுக்கு விடுதலை! அன்றுதான் அவர்களின் வாழ்வு மலரும்.

ஆகவே கூரைவாசிகள் இன்ப வாழ்வு நடாத்த வேண்டுமானல் அவர்கள் மதம், கடவுள், சாத்திரம் என்னும் கட்டுக்களை அறுத்தெறிய வேண்டும். அவைகளின் மூலம் தமது உழைப்பின் பலன் ஆரியம் வாழப் பயன்படுகிறது என்பதை அறிய வேண்டும். உழைக்கும் கூட்டம் உதறித் தள்ளப் பட்டும் உழைக்காத நயவஞ்சகக்கூட்டம் பாதுகாக்கப் பட்டும் வருகிறது என்பதை உணர வேண்டும். வருங்காலத்திலும் இப்படியேதான் நடக்கும் என்பதையும் அறிய வெண்டும். அவர்கள் விதியை நம்பி மதியை இழக்கலாகாது என்றறிய வேண்டும். கடவுள் துணை என்பதை விடுத்து அறிவே துணை என்று கொள்ள வேண்டும். ஒற்றுமையே உயர் துணை என்பதை அறிய வேண்டும். ஓர் காலத்தில் ஏற்றத்தாழ்வின்றி வாழ்ந்த தங்களிடையே மதத்தின் பெயரால், கடவுள், சாத்திரத்தின் பெயரால் ஏற்றத் தாழ்வு உண்டாக்கப்பட்ட சூழ்ச்சி ஆரியத்தின் சூழ்ச்சி என்பதை ஆராய்ந்தறிய வேண்டும். அவைகளின் பெயரால் தாங்கள் இழிமக்களாகவும், நயவஞ்சகக் கூட்டத்தினர் உயர்ந்தோராகவும் ஆக்கப்பட்டனர் என்பதை உணர வேண்டும். உணர்ந்து இப்படிப்பட்ட சூழ்ச்சிகளுக்கெல்லாம் காரணமாக இருக்கும் மதம், சாத்திரம் கடவுள் எனப்படுபவைகளை அடியோடு களைந்தெறிய வேண்டும். உழைப்பாளிகளை உய்விக்கும் வள்ளுவர் குறளினை மதிக்க வேண்டும். இன்பந்தரும் பழந்தமிழ் நூற்கருத்துக்களை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு'' என்றபடி அவர்கள் வாழ்க்கையின் ஒவ்வோர் 'துறையிலும் நடந்து கொள்ளவேண்டும். இந்த வள்ளுவர் குறளினை வலியுறுத்தி வரும் தன்மான (சுயமரியாதை) இயக்கத்தின் தொண்டில் அவர்கள் பங்கு கொள்ள வேண்டும். அப்படிப் பங்கு கொள்வார்களானால், தமது வாழ்வைப்பகுத்தறிவு வழியே செலுத்தி முன்னேற்றம் என்ற இன்பபுரியை அடைவர். தங்களின் பண்டைப் பெருமையைத் தரணியில் நிலை நாட்டுவர். தங்கள் வறுமைத் தோழனை அவர்கள் அன்றுதான் பகைத்துக் கொண்டு இன்ப வாழ்வை நடத்த ஆரம்பிப்பர். உழைப்பின் பயனைக் கொள்வர்.

[2ம் பக்கத் தொடர்ச்சி]

மிழ் நாடும் எந்நாடும்'' நமது திராவிட நாடு மட்டிலுமல்ல, எந்நாடாக இருந்த போதிலும் பெண்களால் முன்னேறக் கூடும் என்ற புரட்சிக் கவியரசரின் சொல்லை மனதில் நிறுத்துங்கள்! சிந்தனைக்கு வேலை கொடுங்கள். செயலாற்ற முன் வாருங்கள்! அப்பொழுதுதான் நம் வாழ்க்கை வாழ்வதற்கென்றே ஆக முடியும். வாழ்க்கையை வளமுறவும் செய்ய முடியும்.

**கலப்பு மணமே விலக்கும் ஜாதியை.**



T. K. S. சகோதரர்களின் நாடகம்.

கோவை ஷண்முகா தியேட்டரில்,

4—1—48 வரை

'முள்ளில் ரோஜா'

(By. V. நீலகண்டன்)

★

6-1-48 முதல் 11-1-48 வரை

'பில்ஹணன்'

(By. A. S. A. சாமி.)

★

புதன், ஞாயிறு மாலை 6-30. மற்ற நாட்கள் இரவு 9-30.

திங்கள் விடுமுறை நாள்.

14—1—48 முதல்

'பிரசண்ட விகடன்' ஆசிரியர் திரு. நாரண துரைக்கண்ணன் எழுதிய நாடகம்

"உயிரோவியம்"

## எமது தீர்ப்பு

### ஐக்கிய திராவிடம்.

ஆசிரியர்: விவேகி. விலை அணா 12.

இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியலைச் சுருங்கிய அளவில், ஆனால் விளக்கமாக வரலாற்றுச் சான்றுகளுடன் ஆராய்ச்சி முறையில் எழுதி, இறுதியில் ஐக்கிய திராவிடம் அமைய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் ஒரு சிறந்த நூல். நூலின் முடிவில் கருஞ் சட்டையணிய வேண்டிய கட்டாயத்தையும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

### நாம் யார்?

ஆசிரியர்: விவேகி. விலை அணா 8.

பன்னெடுங் காலமாக நாம் யாரென்பதையறியாது, சட்டப்படியும் சாஸ்திரப்படியும்சூத்திராகி அடிமை நிலையில் உழலும்திராவிடமக்கள்தம்மையுணரும் வண்ணம் வரலாற்று ஆதாரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டுள்ள நூல். விரிவான ஆராய்ச்சியின் முடிவில், நாம் திராவிடர் நமது வைரியேஆரியம், என்பது நன்கு நிலை நாட்டப்பட்டுள்ளது. பெரியாரவர்களின் மதிப்புரையையும் தாங்கியுள்ளது இந்நூல்.

### கனவில் கண்ட கவி.

ஆசிரியர்: விவேகி. விலை அணா 10.

தருப்பைப் பார்ப்பனர் முதல் தேசீயப் போர்வையிலுள்ள கதர்க் குல்லாப் பார்ப்பனர் ஈறாகத் திராவிடமக்களுக்கு இழைத்து வரும் பல்லாயிரம் கொடுமைகளையும், அவற்றை அகற்ற ஒரு கவிஞரும், அவர் காதலியும், கருஞ்சட்டைப் பட்டையினரும் படும் பாட்டினையும், இறுதியில் ஆரியம்தோற்கடிக்கப்பட்டுத் திராவிட இனஅரசு ஏற்படுவதாகவும், கனவு நிலையில் ஒரு கவி ஒரு கனவு கண்டதாகச், செய்யுள் வடிவில் எளிய நடையில் இனிமையாக இயற்றப் பெற்றுள்ளது.

இவை மூன்றும் சென்னை மவுண்ட்ரோடு முக்தாருன்னிஸா பேகம் தெரு, திராவிட கலா நிலையத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன. கண்டிப்பாகத் திராவிடரனைவரும் படித்துப் பயனுற வேண்டியவையாகும்.

### கலப்பு மணக் காதலர் தெம்பாங்கு.

ஆசிரியர்: எம். ஆர். மத்திரன். திண்டுக்கல். விலை அணா 2.

ஜாதிகள் ஒழிந்து மக்கள் மக்களாக வாழவேண்டும் என விரும்பும் தோழர் மத்திரன் அவர்கள், பழைய சிறந்த இலக்கியங்களின், குறிப்பாக அகப்பொருள் இலக்கியங்களின்-உயரிய கருத்துகள் ஆங்காங்கே விரவி வர, கருத்துகள் செறிந்த புதிய உவமைகள் உண்மையை வற்புறுத்த எளிய செந்தமிழ் நடையில், இருவேறு குலத்தின் ஆணும் பெண்ணும், உற்றாரும் மற்றோரும் ஒப்ப, மணந்த நிகழ்ச்சியை உயரிய சொற்களால், விளக்குவதாய் தேன்பாங்காக அமைந்துள்ளது. அனைவரும் படித்து இன்புறத் தக்கது.

---

என்னிடத்திலுள்ள ஒரு குற்றத்தைக் கண்டுபிடித்தால் நான் என்னுடைய அபிப்பிராயத்தையே மாற்றிக் கொள்ளுகிறேன். ஏனெனில் உண்மையே எனது ஆர்வம். உண்மையான விஷயங்கள் ஒருவரையும் பாதிப்பதில்லை. யார் ஒருவர் அறியாமையிலும் குற்றத்திலுமே வாழ்கிறார்களோ அவர்களே அதிக துன்பத்தை யடைகிறார்கள். மார்க்யூஸ் ஆரிலியஸ்.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.